வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu






Email : news@eelanadu.lk | மலர் : 03 | 22.12.2021 புதன்கிழமை | இதழ் : 17 | பக்கங்கள் : 16


## தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டம்:

# கடும் வாக்குவாதங்களுக்கு மத்தியில் புதிய வரைவுக்கு கட்சிகள் இணக்கம்!

*சனிக்கிழமை கையொப்பங்கள் சேகரிப்பு*

*இந்தியப் பிரதமருக்கு திங்களன்று கடிதம்!*



கொழும்பு, டிசெம்பர் 22

இந்தியப் பிரதமருக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் தொடர்பில் புதிய வரைவு தயாரிப்பது என்ற இணக்கத்துடன் கொழும்பில் நேற்றுக் கூடிப் பேசிய தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டம் நிறைவடைந்தது.

அத்துடன், இந்தப் புதிய வரைவை சரிபார்த்து எதிர்வரும் சனிக்கிழமைக்குள் அந்த ஆவணத்தில் 11 கட்சிகளின் தலைவர்களும் கையொப்பமிடுவது என்றும் இவ்வாறு அனைத்துத் தலைவர்களும் கையொப்பமிட்டதும் திங்கட்கிழமை இந்தியப் பிரதமர் மோடிக்கு இந்தியத் தூதரகம் ஊடாக கடித ஆவணத்தை அனுப்பி வைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

15

## ராஜா திரையரங்க உரிமையாளர் எஸ். ரி. ஆர். நேற்று காலமானார்!



கொழும்பு, டிசெ. 22

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மூத்த பிரமுகரும் யாழ்ப்பாணம் ராஜா திரையரங்க உரிமையாளரும் பிரபல தொழிலதிபருமான எஸ். ரி. ஆர். என்று அறியப்பட்ட எஸ். தியாகராஜா நேற்று

15

## சீனாவுடன் மட்டுமல்ல இந்தியாவுடனும் எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும்!

**விக்னேஸ்வரன் எம். பி.**

கொழும்பு, டிசெ. 22

சீனாவுடன் மட்டுமல்லாமல் இந்தியாவுடனும் கவனமாக நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். இல்லையேல், வருங்காலத்தில் இலங்கை பல்வேறு பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கும் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன்

15

## அத்துமீறும் இந்திய படகுகள் அரசுடைமையாக்க ஏற்பாடு!

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

யாழ்ப்பாணம், டிசெ. 22

எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பினுள் நுழைகின்ற இந்திய மீன்பிடிப் படகுகள் கைது செய்யப்பட்டு சட்ட ரீதியாக அரசுடைமையாக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - மயிலிட்டித் துறைமுகத்தை

15

## பஸ், ரயில் கட்டணம் அதிகரிக்கப்படாது

**இராஜாங்க அமைச்சர் அமுனுகம**

கொழும்பு, டிசெம். 22

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும், இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் அல்லது ரயில் கட்டணங்கள் தற்போதைக்கு அதிகரிக்கப்படாது என போக்குவரத்து இரா

15

## வெதுப்பக உற்பத்திகளுக்கு கட்டுப்பாட்டு விலை நீக்கம்

கொழும்பு, டிசெ. 22

பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலைகள் நேற்று நள்ளிரவு முதல் இரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அகில

15




## கொரோனாவுக்கு 24 பேர் பலி

கொழும்பு. டிசெ. 22

நேற்று முன்தினம் கொரோனா தொற்றினால் 24 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய இது வரையில் மொத்தமாக 14 ஆயிரத்து 795 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளது.

## பயங்கரவாத தடை சட்டத்தில் திருத்தங்கள்; புலம்பெயர்ந்தோருடன் செயல்படுகிறோம்

**அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சருடனான சந்திப்பில் ஜனாதிபதி**

கொழும்பு, டிசெம் 22

பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்களை செய்வதற்கு அரசாங்கம் புலம்பெயர் மக்களுடன் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

### மீனவர்கள்மீது கிருமிநாசினி தெளிப்பு:

# மனித உரிமைகள் மீறலென தமிழகத்தில் கொந்தளிப்பு!

சென்னை, டிசெ. 22

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள்மீது இலங்கையில் கிருமி நாசினி பீய்ச்சி அடித்து மனித உரிமை மீறல் நடந்துள்ளதாக தேசிய மீனவர் பேரவை குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து தேசிய மீனவர் பேரவைத் தலைவர் இளங்கோ இன்று கூறுகையில், “கடலில் மீன் பிடிக்கச் சென்ற இராமநாதபுரம் மற்றும் புதுகை மாவட்ட மீனவர்கள் 69 பேரையும் அவர்களின் 10 படகுகளையும் இலங்கை கடற்படை பிடித்துள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் ஒவ்வொருவரையும் கையை உயர்த்தி நிற்கச் செய்து அவர்கள் மீது கிருமி நாசினி தெளித்துள்ளனர். கட்டடம், வாகனம் போன்ற உயிரற்ற பொருட்கள்மீது தெளிக்கக்கூடிய கிருமி நாசினியை மீனவர்கள் மீது பீய்ச்சி அடித்தது அப்பட்டமான மனித உரிமை மீறல். கொரோனா காலத்தில் கூட இதுபோன்ற கொடுமை நிகழ்ந்தது இல்லை.

இச்செயல் உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதல்களை மீறிய கொடூரச் செயல். இந்த மனித உரிமை மீறல் பற்றி சர்வதேச மனித உரிமை ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்”, என்றார். (ஐ)

# புகையிர நிலைய பொறுப்பதிகாரிகள் 26ஆம் திகதி முதல் வேலைநிறுத்தம்!

கொழும்பு, டிசெ. 22

புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சேவையில் நிலவும் பல்வேறு குறைபாடுகளுக்கு தீர்வு கோரி புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தினர் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளனர் என்று புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார்.

சுமார் 700 புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு பல வருடகாலமாக பதவி உயர்வு வழங்கப்படவில்லை. கனிஷ்ட புகையிரத சேவையாளர் பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை உள்ளிட்ட பல பிரச்னைகள் புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்திற்குள் காணப்படுகிறது.

பிரச்னைகள் குறித்து புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தினரிடமும், போக்குவரத்து துறை அமைச்சரிடமும் இடம்பெற்ற பேச்சுக்கள் வெற்றி பெறாத காரணத்தினால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் கூறினார். (ஐ)

# மரண அறிவித்தல்

**பிறப்பு**
**05 - 04 - 1965**



**இறப்பு**
**19 - 12 - 2021**

## தனபாலசிங்கம் இந்திரகுமார்

யாழ். புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் இந்திரகுமார் அவர்கள் 19.12.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் – சற்குணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்துலிங்கம் – கனகேஸ்வரி (யாழ்ப்பாணம்) தம்பதியரின் அன்பு மருமகனும், கலாராணி(கனடா) அவர்களின் அன்புக் கணவரும், தரணிகா, ரக்ஷகா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்), விஜயகுமார் (வவுனியா), துதி ஆனந்தன் (ஜேர்மனி), ரவிக்குமார்(கனடா), வசந்தகுமார்(கனடா), சியாமளா (கனடா), சிவக்குமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலராணி, இரத்தினவேணி, லலிதாதேவி, ஜெகதா, சுசிலா, மஞ்சுளா, தருமலிங்கம், செல்வராணி(இலங்கை), சாந்தி (இலங்கை), நந்தகோபால் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு :
Wednesday, 22 Dec 2021 6:00 PM - 9:00 PM
Thursday, 23 Dec 2021 7:30 AM - 8:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை :
Thursday, 23 Dec 2021 8:00 AM - 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம் :
Thursday, 23 Dec 2021 10:30 AM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**ரவி - சகோதரன்**
Mobile : +16479214444

தகவல் :
**குடும்பத்தினர்**



## பெற்றோல் விலையை ஐ. ஓ. சியும் உயர்த்தியது

கொழும்பு, டிசெ. 22

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட விலைத் திருத்தத்திற்கு அமைவாக ஐ. ஓ. சி நிறுவனமும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் எரிபொருள்களின் விலையை அதிகரித்துள்ளது.

இதன்படி 92 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை 177 ரூபாவாகும்.

ஒக்ரேன் 95இன் விலை 23 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி புதிய விலை 210 ரூபாயாகும்.

டீசல் லீற்றர் ஒன்றின் விலை 7 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஐ. ஓ. சி. டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 121 ரூபாயாகும்.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலை 159 ரூபாயாகும். (ஐ)

## கல்வி tv CHANNEL-1

**22.12.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**22.12.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
22.12.2021 புதன்கிழமை
பிலவ வருடம், மார்கழி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

editor@eelanadu.lk, eelanaduweekly@gmail.com, news@eelanadu.lk
021 730 1370

# கூட்டமைப்பின் வெளிவிவகார கொள்கை?

ஓர் அரசியல் அணுகுமுறை அறிவுபூர்வமானதாகவும் - அதேவேளை உலக நிலைமைகள் பற்றிய அறிவிலிருந்தும் உருவாகவேண்டும். ஆனால், பொதுவாகவே தமிழ் தேசிய அரசியல் பரப்பில் உச்சரிக்கப்படும் பல்வேறு விடயங்கள் அவ்வாறானதாக இருப்பதில்லை. புவிசார் அரசியல் தொடர்பில் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இயங்கும் கட்சிகள் மத்தியில் போதிய புரிதல் இருப்பதாக தெரியவில்லை. இது தொடர்பில் எங்களுக்கும் ஏதோ தெரியும் - நாங்களும் புரிந்திருக்கின்றோம் - என்பதை காண்பிக்கும் வகையிலேயே பலரும் பூகோள அரசியல் தொடர்பில் பேச முற்படுகின்றனர். இலங்கையை மையப்படுத்தியிருக்கும் புவிசார் அரசியலென்பது, மூன்று நாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. அதவாது, இந்தியா, அமெரிக்கா மற்றும் சீனா.

இந்த மூன்று நாடுகளில் இந்தியாவும் அமெரிக்காவும் ஓர் அணியாகவும் - இவர்களுடன் முரண்படும் சக்தியாக சீனாவும் இருக்கின்றது. உலகளவில் அமெரிக்காவிற்கு சவாலாக சீனா, எழுச்சியடைந்துவருகின்றது. இந்த எழுச்சியே மறுபுறம் சீனாவிற்கும் அமெரிக்காவிற்குமான உலகளாவிய போட்டியை உருவாக்கியிருக்கின்றது. இது ஓர் உலகளாவிய பிரச்னை. மேலோட்டமாக பார்த்தால் இது, அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான அதிகாரப் போட்டி போல் தெரியலாம். ஆனால், உண்மை அதுவல்ல. இது வெறுமனே இரண்டு வல்லரசுகளுக்கு இடையிலான அதிகாரப் போட்டியல்ல. இது இரண்டு சிந்தனை முறைமைகளுக்கு இடையிலான போட்டி.

அமெரிக்கா, ஜனநாயக முறைமைக்கு தலைமை தாங்கும் நாடு. அதாவது, பல கட்சி ஜனநயாகம், மனித உரிமைகளை முதன்மைப்படுத்தும் ஓர் ஆட்சி முறைமை. ஆனால், சீனா, இதற்கு முற்றிலும் மாறான ஆட்சி முறைமையை கொண்டிருக்கின்றது. சீனா பல கட்சி ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ளாத நாடு. ஜனநாயகம், மனித உரிமைக் கோட்பாடுகளை அங்கீகரிக்காத நாடு. வாழ் நாள் ஜனாதிபதியை கொண்டிருக்கும் நாடு. இவ்வாறானதொரு நாடு உலக அதிகாரமாக எழுச்சியடைவதும், ஏனைய நாடுகளுக்குள் செல்வாக்கை செலுத்துவதும், காலப் போக்கில், அமெரிக்கா மற்றும் மேற்குலகத்தின் தலைமையின் கீழுள்ள ஜனநாயக உலக ஒழுங்கை கேள்விக்குள்ளாக்கிவிடும்.

இதுதான் சீனாவிற்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையிலான அடிப்படையான முரண்பாடு. சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான முரண்பாடும் இத்தகைய ஒன்றாகவே இருந்தது. சோவியத்தின் பேரெழுச்சி என்பது கம்யூனிச சித்தாந்தத்தின் எழுச்சியாகும். சோவியத்தின் எழுச்சி, சோவியத் முறைமையை பின்பற்றும் உலக ஒழுங்கை ஏற்படுத்தியிருந்தது. இதன் காரணமாகவே உலகம் இரண்டு துருவங்களாக பிளவுற்றிருந்தது. சோவியத்தின் வீழ்ச்சியை தொடர்ந்தே, இந்த நிலைமை மாற்றமடைந்தது. சீனாவின் எழுச்சியை தொடர்ந்து, இப்போது மீளவும் அவ்வாறானதோர் உலக நிலைமை எட்டிப் பார்க்கின்றது. சோவியத் - அமெரிக்க பனிப் போர் போன்றதொரு நிலைக்குள், இன்னும் உலகம் செல்லாவிட்டாலும் கூட, அவ்வாறானதொரு முரண்பாட்டிற்கான தோற்றம் தெரிகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில்தான், ஈழத் தமிழர்களுக்கான நீதியை உறுதிப்படுத்துமாறு கோரி, அமெரிக்க மற்றும் மேற்குலக ஜனநாயக நாடுகளின் கதவுகளை ஈழத் தமிழர்கள் தட்டிவருகின்றனர். அரசியல் தீர்வில் இந்தியாவின் தலையீட்டை கோருகின்றனர். ஈழத் தமிழர்களின் முதன்மைத் தெரிவாக இந்தியாவும் அமெரிக்காவும் இருக்கின்ற நிலையில்தான், வடக்கு, கிழக்கில் சீனாவின் பிரசன்னத்தை தாம் எதிர்ப்பதாக கூட்டமைப்பின் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பானவராக கருதப்படும் எம். ஏ. சுமந்திரன் பகிரங்கமாகக் கூறி வருகின்றார். சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றின் போதும், அவர் இதனை தெரிவித்திருந்தார். சீனத் தூதுவரின் யாழ். விஜயத்தின் பின்னர்தான் குறித்த கூட்டம் இடம்பெற்றிருந்தது. ஆனால், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் உறுப்பினர் ஒருவர் - சீனாவை பகைமைச் சக்தியாக தமிழ் மக்கள் பார்க்கக் கூடாதென்று கூறியிருக்கின்றார். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் பனிப் போர் இடம்பெற்றுவரும் நிலையில் - ஒருவரது கருத்தை எதிர்க்கவேண்டும் என்னும் நோக்கிலேயே இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இது ஆரோக்கியமானதல்ல. வெளிவிவகார விடயங்கள் தொடர்பில் கூட்டமைப்பிற்குள் ஒரு தெளிவான புரிதல் இருக்க வேண்டும். வெளிவிவகார விடயங்களை பொறுப்பற்ற விதத்தில் அனைவரும் பேசக்கூடாது. ஒரு பொது நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே பேச வேண்டும். அதனையும் அதற்கென்று நியமிக்கப்பட்டவர்கள் மட்டுமே பேச வேண்டும்.

சீனா தொடர்பில் சுமந்திரன் கூறுவதுதான் கூட்டமைப்பின் கொள்கை நிலைப்பாடு என்றால் அதனையே அனைவரும் பேசவேண்டும். அல்லது அனைவருமாக ஒன்றிணைந்து, உரையாடி, இந்த விடயத்தில் எவ்வாறான முடிவை எடுப்பது தமிழ்மக்களுக்கு நீண்ட கால நோக்கில் நல்லது என்பதில் இணக்கம் காண வேண்டும். அவ்வாறில்லாது, அமெரிக்க தூதரகத்தில் ஒரு கருத்தையும், இந்திய தூதரகத்தில் ஒரு கருத்தையும், ஊடகங்களில் ஒரு கருத்தையும் வெளியிடக் கூடாது. வெளிவிவகார விடயங்களை உள்ளூர் வாக்கு வங்கி அரசியலுக்கு பயன்படுத்த முற்படுவது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

# 37ஆவது அகவையில் கால் பதிக்கும் சதாவதானி சி. க. வ. கூட்டுறவு சங்கம்!

க. தங்கராசா
(முன்னாள் தலைவர்)



*சதாவதானி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் - தம்பசெட்டி, பருத்தித்துறை என்ற இந்தச் சங்கமானது 21. 12. 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 36 வருடங்கள் நிறைவு பெற்றுள்ளன. சுமார் 20 அங்கத்தவர்களுடன் ஆரம்பித்த இந்தச் சங்கம் பல்வேறு பட்ட வளர்ச்சிப் படிகளுடன் அபரிதமான முன்னேற்றத்துடன் புலோலி மேற்கு, புலோலி மத்தி ஆகிய இரு சேவையாளர்கள் பிரிவை உள்ளடக்கிய அங்கத்தவர்களுக்கு பல்வேறு விதமான வாழ்வாதாரத் திட்டங்கள் சேவைகள் என்பனவற்றை வழங்கி யாழ். மாவட்டத்திலேயே முதன்மையான சங்கமாக உள்ளது.*

*மேலும் இந்தச் சங்கம், சொந்தக் கட்டடத்தில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்களுடன் இயங்கி வருகின்றது.*

*தற்போது இந்தச் சங்கம் 373 அங்கத்தவர்களோடு இயங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. வருடந்தோறும் பொதுக்கூட்டங்கள் கூட்டப்பட்டு புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டு சங்கம் நிறுவன மயப்படுத்தப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.*

*சங்கமானது பல்வேறுபட்ட நல உதவித்திட்டங்களை முன்னெடுத்து சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. அங்கத்தவர்களுக்கான கடன் உதவித் திட்டம், விவசாயிகளுக்கான பருவ கால கடன் திட்டங்கள், மரண சகாய நிதித் திட்டம், விபத்து நிதித் திட்டம், மகப்பேற்று நிதி அங்கத்தவர்களுக்கான சேமிப்புக் கணக்கு, நிலையான வைப்புக்கு எதிரான கடன் வழங்கல் போன்றவை வழங்கப்படுகின்றன. அத்துடன், கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கு வழக்குகளினூடாக இவை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றை செயல்படுத்த மூன்று அலுவலர்கள் கடமையாற்றுகின்றார்கள் வருடாந்தம் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களால் சங்கக் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டு வருகின்றன.*

*அந்த வகையில் 2019 ஃ 2020ஆம் நிதியாண்டு காலத்திற்கு சங்கம் 6 இலட்சத்து 9 ஆயிரத்து10 ரூபாயை தேறிய இலாபமாக பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*இச் சங்கத்தில் கடந்தகாலச் செயல்பாடுகளாக பின்வருவனவற்றை பதிவிட முடியும், தையல் பயிற்சி நிலையம் நடாத்தியமை, விவசாயக் கடன் வழங்க ஆரம்பித்தமை( 1989) சதாவதானி கதிரைவேற்பிள்ளை கல்வி நிலையம், போர்க்கால சூழலில் விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு தானிய வகைகள், உரம் மண்ணெண்ணெய், இலகுவான கடன் அடிப்படையில் வழங்கியமை, நீர் இறைக்கும் இயந்திரங்களை யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சமாசத்தின் ஊடாக பெற்று விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வழங்கியமை (1990 - 1999).*

*2000ஆம் ஆண்டு சங்கத்திற்கான கட்டடம் நிர்மாணிப்பதை நோக்கமாகக் கொண்டு மூன்று குழியுடன் கூடிய அரை பரப்பு காணி ஒன்றை சதாவதானி கதிரைவேற் பிள்ளை வீதியில் கொள்வனவு செய்யப்பட்டு மாடிக் கட்டிடம் ஒன்று 15 இலட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபாய் செலவில் 2002ஆம் ஆண்டு கட்டப்பட்டு இயங்கத் தொடங்கியது என்பதையும் பதிவிட விரும்புகின்றேன்.*

*இச் சங்கமானது புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பல்கலைக் கழகங்களுக்கு தெரிவான மாணவர்கள் ஆகியோரை கௌரவப்படுத்தி பரிசில்கள் வழங்கல், சங்க எல்லைப் பரப்பிற்குள் வதியும் முதியோரைக் கௌரவித்தல், சமூக சேவையாளர்களைக் கௌரவித்து சமூக சேவையாளர் விருதுகள் வழங்கல் போன்ற நற்பணிகளையும் 2006ஆம் ஆண்டில் இருந்து மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.*

*சங்கத்தின் சிறந்த செயல்பாடுகள் காரணமாக பல தடவைகள் எமது சங்கம் மாவட்ட, மாகாண ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது. 2012ஆம் ஆண்டு தனது வெள்ளிவிழாவை சிறப்பாக கொண்டாடியதுடன் வெள்ளிவிழா மலர் ஒன்றையும் வெளியிட்டு சங்கத்தின் செயல்பாடுகளை ஆவணப்படுத்தியுள்ளது என்பதோடு பொருளாதாரம், சமூகவியல், சம்பந்தமான சிறந்த கட்டுரைகளை துறைசார்ந்தவர்கள் எழுதியிருப்பதும் சிறந்த அம்சமாகும்.*

*இதனை அடுத்து சங்கத்தின் நிதிநிலைமையை ஸ்திரப்படுத்தும் நோக்கில் இன்னொரு மைல் கல்லாக சங்கத்தில் சூரிய மின் கலத் (Solar) தொகுதி ஒன்றை ரூபாய் 26 இலட்சம் செலவில் பொருத்தி மாதாந்தம் சராசரி வருமானமாக ரூபாய் 55 ஆயிரம் அளவில் பெற்றுக்கொள்ளவதற்கான திட்டத்தை 2020 ஆம் ஆண்டு பதவி வகித்த இயக்குநர்சபை முன்னெடுத்ததன் மூலம் சங்கம் மாதாந்தம் நல்ல வருமானத்தைப் பெற்று வருகின்றது என்பதையும் இவ்விடத்தில் பதிவிடல் பொருத்தமானது.*

*இவ்வாறாக, இச்சங்கத்தை 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்க முன்நின்று உழைத்தும் தேவையான காலங்களில் தேவையான சிறப்பு நலத்திட்டங்களை அங்கத்தவர்களுக்காக உருவாக்கியும் செயல்பட்ட இயக்குனர் சபையை, மற்றும் திட்டங்களுக்கு அனுமதி அளித்து ஊக்குவித்த கூட்டுறவுத் துறையினர், சிக்கன கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினர் ஆகியோரை அகவை 37 இல் கால் பதிக்கும் இத்தருணத்தில் நினைவு கூர்ந்து கொள்வது மிகவும் சிறப்பான விடயமாகும்.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 22 புதன்கிழமை
பிலவ வருடம் - மார்கழி - 07
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : திரிதியை




**மேடம்**
பணப்பற்றாக்குறையால் ஏற்பட்ட சிரமம் இன்று நீங்கும். இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடுவதை தவிர்க்கவும். சக பணியாளர்களிடம் இருந்து வந்த எதிர்ப்புகள் அடங்கும்.

**இடபம்**
நல்ல நபர் ஒருவர் அறிமுகமாவார். கவலையற்ற நாள். கவலை ஒன்று தீர்ந்து நிம்மதி அளிக்கும். உற்சாகம் கூடும். குடும்ப ஒற்றுமை நிலைக்க எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**மிதுனம்**
சோம்பல் வேண்டாம். பணிகளில் கவனமாக இருக்கவும். இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். நட்பு வட்டம் விரியும். பொறுப்பும் சுறுசுறுப்பும் அதிகரிக்கும். சிரமம் நீங்கும்.

**கடகம்**
ஆடை, ஆபரணம் சேரும். செலவு கூடும். கற்பனை பயம் வேண்டாம். கடன் பாக்கி வசூலாகும். மன நிறைவு உண்டு. உற்சாகமான நாள். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். எதிரி விலகுவார்.

**சிம்மம்**
அடுத்தவர்களின் நலனுக்காகப் பாடுபட்டு பெருமிதம் கொள்வீர்கள். நீங்கள் விரும்பிய வகையில் இடமாற்றம் உண்டாகலாம். சொத்து வாங்கும்போது கவனமாக இருப்பது நல்லது.

**கன்னி**
மாணவர்கள் இன்று அதிகம் உழைத்துப் பலன் பெறுவர். அலைச்சலுக்குப் பிறகு கடினமான விஷயம் ஒன்று நிறைவேறும். அரசாங்க நன்மை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு.

**துலாம்**
குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சுபநிகழ்வு ஒன்று உண்டு. நீண்ட நாளாக இருந்து வந்த உடல் உபாதை மறையும். மனதை அரித்துக் கொண்டிருந்த கவலையில் இருந்து விடுபடுவீர்கள்.

**விருட்சிகம்**
வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. முயற்சி காரணமாக முன்னேறுவீர்கள். பிரச்னைகள் தீரும். புதிய முயற்சிகளை சிறிது காலத்திற்கு தள்ளி வையுங்கள்.

**தனுசு**
எதையும் எதிர்ப்பதை விடுத்து அனுசரித்து செல்வது நன்மை தரும். மாணவர்கள் சவால்கள், போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். மனம் மகிழும். குழந்தைகளால் பெருமை அடைவீர்கள்.

**மகரம்**
உங்களால் மற்றவர்கள் பயன் அடைவர். பேச்சில் கவனம் தேவை. கடந்த சில நாளாக இருந்து வந்த மனஅழுத்தம் விலகும். ஆதரவு பெருகும். வெற்றி வாய்ப்பு கூடும். பொறுமை தேவை.

**கும்பம்**
பிரச்னைகள் தீரும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். முயற்சியில் தடை, தாமதங்கள் இருக்கும். நண்பர்களைச் சந்திப்பீர்கள். பிரச்னை ஒன்றிற்குத் தீர்வு கண்டு நிம்மதி அடைவீர்கள்.

**மீனம்**
எந்தவொரு விஷயத்திலும் பதற்றமின்றி முடிவு எடுப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அழகும் இளமையும் கூடும். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். திறமைகள் கூடும்.

# மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி ஆயிரக்கணக்கான மீனவர் போராட்டம்

## ரயில் மறியலுக்கும் திட்டம்



இராமேஸ்வரம், டிசெ. 22

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்ளையும், படகுகளையும் மத்திய, மாநில அரசுகள் மீட்க வலியுறுத்தி, இராமேஸ்வரத்தில் நேற்று முன்தினம் மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்கி கண்டன ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர். மேலும் உண்ணாவிரதம் மற்றும் ரயில் மறியல் போராட்டங்களையும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து சென்று நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த 6 பேருக்குச் சொந்தமான விசைப் படகுகளில் இருந்த 43 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்தனர். அதேபோல, மண்டபம் துறைமுகத்தில் இருந்து சென்ற இருவரின் விசைப்படகுகளில் இருந்த 12 பேரையும் இலங்கை கடற்படை சிறைபிடித்தது.

இந்நிலையில், இந்த 55 மீனவர்களையும், 8 படகுகளையும் உடனடியாக விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தத்தை தொடங்கினர். இதனால் இராமேஸ்வரத்தில் 800இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையோரங்களில் நங்கூரமிடப்பட்டிருந்தன. விசைப்படகு மீனவர்கள் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கடலுக்குச் செல்லவில்லை. இதே கோரிக்கையை வலியுறுத்தி இராமேஸ்வரம் பஸ் நிலையம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இன்று புதன்கிழமை தங்கச்சி மடத்தில் உண்ணாவிரதப் போராட்டமும், ஜனவரி 1ஆம் திகதி ரயில் மறியல் போராட்டமும் நடத்தப்படும் என மீனவர்கள் அறிவித்தனர்.

# மீனவர் கைதாகும் நடவடிக்கைக்கு நிரந்தர தீர்வு காணப்படவேண்டும்

## வலியுறுத்துகிறார் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்

சென்னை, டிசெ. 22

தமிழக மீனவர்கள் மீது தொடரும் இலங்கை கடற்டையினரின் கைது நடவடிக்கைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என பாமக நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.


இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ”வங்கக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டு மீனவர்கள் 14 பேரை இலங்கை கடற்படை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறது. இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 55 பேர் கைது செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள அதிர்ச்சியும், கவலையும் விலகுவதற்கு முன்பே மேலும் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளது வேதனை அளிக்கிறது.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்களை விடுதலை செய்யக் கோரி அங்குள்ள மீனவர் அமைப்பினர் இராமேஸ்வரம் பேருந்து நிலையத்தில் போராட்டம் நடத்தினர். காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தையும் தொடங்கியுள்ளனர். அதேபோல், ஜெகதாப்பட்டினம் மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி அங்குள்ள மீனவர் அமைப்பினரும் வேலை நிறுத்தம் தொடங்கியுள்ளனர். அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, கைது செய்யப்பட்டுள்ள 69 தமிழக மீனவர்களையும் விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

தமிழக மீனவர்கள், ஒவ்வொரு ஆண்டும் ஆயிரத்திற்கும் அதிக எண்ணிக்கையில் கைது செய்யப்படுகிறார்கள். இந்தியா அளிக்கும் அழுத்தம் காரணமாக அவர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர். ஆனாலும் அவர்களின் படகுகளை இலங்கை அரசு திரும்பத் தருவதில்லை. இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறல்களை தாங்கிக்கொள்ள முடியாத பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் வேறு தொழில்களுக்கும், வெளிநாடுகளுக்கும் செல்கின்றனர். இத்தகைய நிலையைப் போக்க மீனவர்கள் பிரச்சினைக்கு அரசு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# நளினியின் பரோல் மனு பரிசீலனையில் உள்ளது

## சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தெரிவிப்பு



சென்னை, டிசெ. 22

ராஜீவ் கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நளினியின் பரோல் மனு பரிசீலனையில் உள்ளதாக தமிழ்நாடு அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

நளினிக்கு ஒரு மாதம் பரோல் வழங்க கோரி அவரது தாயார் பத்மா சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அதில், தம்முடைய உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளதால் மகள் நளினிக்கு ஒரு மாதம் பரோல் வழங்கும்படி கடந்த மே மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் உள்துறைச் செயலாளருக்கு அனுப்பிய மனு மீது எந்த முடிவும் எடுக்கப்படாமல் இருப்பதாக குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில், நளினியின் தாயார் தொடர்ந்த வழக்கு நீதிபதிகள் பி.என் பிரகாஷ், ஹேமலதா அமர்வின் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, நளினியின் பரோல் மனு அரசின் பரிசீலனையில் இருப்பதாக தமிழ்நாடு அரசின் தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னா தெரிவித்தார். இதனையடுத்து நாளை வியாழக்கிழமை அரசின் முடிவை தெரிவிக்கும்படி உத்தரவிட்டு நீதிபதிகள் வழக்கை ஒத்திவைத்தனர்.

# எரிபொருள் நிவாரணம் தராவிடின் பஸ் கட்டணம் 25 வீதத்தால் உயரும்!

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 22

**அரசாங்கத்திடமிருந்து எரிபொருளுக்கான நிவாரணம் கிடைக்காவிடத்து பேருந்து கட்டணத்தை 25 சதவீதத்தால் அதிகரிக்க நேரிடும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அத்துடன், ஆரம்ப பேருந்து கட்டணத்தை 25 ரூபாயாக அதிகரிக்க நேரிடும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கடந்த முறை எரிபொருள் விலை 7 ரூபாயால் அதிகரிக்கப்பட்டபோது பேருந்து கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. தற்போது, 10 ரூபாயால் அந்த தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதால் பேருந்து கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும்.

எரிபொருள் மாத்திரமின்றி பேருந்துக்கான உதிரிப்பாகங்களின் விலைகளும் 300 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் ஜனாதிபதியின் தலையீட்டுடன் முதற்கட்டமாக நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

நிவாரணம் வழங்கப்படாவிடத்து பேருந்து கட்டணத்தை அதிகரிக்க நேரிடும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி முதல் பாடசாலை போக்குவரத்து சேவை கட்டணம் குறிப்பிடத்தக்க அளவு உயர்த்தப்படும் என அகில இலங்கை பாடசாலை போக்குவரத்து சேவை சங்கத்தின் செயலாளர் லலித் சந்திரசிறி தெரிவித்துள்ளார். (ஐ)

# சுயாதீன பத்திரிகையாளருக்கு இனந்தெரியாதோரால் மிரட்டல்!



யாழ்ப்பாணம், டிசெ. 22

பருத்தித்துறையில் சுயாதீன செய்தியாளர் ஒருவருக்கு இனந்தெரியாத நபர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - மந்திகையை சேர்ந்த இ. ஜெகதீஸ்வரன் என்ற செய்தியாளரே இவ்வாறு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளார். கடந்த வருடம், சுயாதீன செய்தியாளரின் சகோதரனான மருத்துவ பீட மாணவன் இறந்த நிலையில் தூக்கிலிருந்து மீட்கப்பட்டார். இந்த மரணம் திட்டமிட்ட கொலை என்றுகூறி அதனை நிரூபிப்பதற்காக செய்தியாளர் போராடி வருகின்றார்.

இது தொடர்பில், பிரதமர் அலுவலகம் விசேட பொலிஸ் குழு ஒன்றை நியமித்து இது தொடர்பில் விசாரணை நடத்தி வருகின்றது. இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளவர்கள் தொடர்பிலும். அண்மையில் அவர் சில தகவல்களை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு செய்தியாளரின் வீட்டின் அருகே சில இனந்தெரியாத நபர்கள் தன்னை அச்சுறுத்தும் விதத்தில் செயல்பட்டனர் என்று அவர் நேற்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ- 3)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு உறுப்பினர் பதவி நீக்கப்பட்டனர்!

## கட்சியின் ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 22

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் இருவரை உடனடியாகக் கட்சியை விட்டு நீக்குவதாக அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க. சுகாஷ் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் பரமானந்தம் தவமணி மற்றும் காரைநகர் அமைப்பாளர் கணபதிப்பிள்ளை நிமலதாசன் ஆகிய இருவருமே கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடியும் சமூகநலன் சார்ந்தும் எடுக்கப்பட்ட முடிவான காரைநகர் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பது என்ற முடிவுக்கு மாறாகச் செயல்பட்ட உறுப்பினர் கட்சியிலிருந்து விலக்கப்படுகிறார் என்று முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற காரைநகர் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்ன ணியின் உறுப்பினர் எதிர்த்து வாக்களித்தவர் என்பதுடன் வரவு - செலவுத்திட்டம் இரண்டாவது தடவையாகும் இம்முறை தோற்கடிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காரைநகர் பிரதேச சபையின் பாதீடு மீண்டும் தோற்கடிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 22

காரைநகர் பிரதேச சபையின் 2022இற்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்று தவிசாளர் மயிலன் அப்புத்துரை தலைமையில் சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது, 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை தவிசாளர் சபையில் இரண்டாவது தடவையாக சமர்ப்பித்தார்.

11 உறுப்பினர்களைக் கொண்ட காரைநகர் பிரதேச சபையில், வரவு - செலவு திட்டத்துக்கு சுயேச்சை குழுவின் 3 உறுப்பினர்கள், ஈ. பி. டி. பியின் 2 உறுப்பினர்கள் என ஐவர் ஆதரவாக வாக்களித்தனர்.

இதேசமயம், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 3 உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய கட்சியின் 2 உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஓர் உறுப்பினர் என 6 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

இதனால், ஒரு மேலதிக வாக்கால் வரவு - செலவு திட்டம் மீண்டும் தோற்கடிக்கப்பட்டது. இதனால், தவிசாளர் தனது பதவியை இழந்தார்.

இந்நிலையில், இரு வாரங்களில் புதிய தவிசாளர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

முன்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமிருந்த காரைநகர் பிரதே சபையின் ஆட்சி, அப்போதைய தவிசாளர் உயிரிழந்தமையை தொடர்ந்து கடந்த மாதம் சுயேச்சைக் குழு கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து கடந்த 8 ஆம் திகதி புதிய தவிசாளர் சபையில் முன்வைத்த நிலையில் தோற்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ - 3)

# ஆய்வை சமர்ப்பிக்க கோருகிறது வவுனியா பல்கலைக்கழகம்!

வவுனியா, டிசெ. 22

வவுனியா பல்கலைகழகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஆய்வு மாநாட்டில் ஆய்வுகளை சமர்பிக்குமாறு வவுனியா பல்கலைகழகம் கோரியுள்ளது.

இது தொடர்பாக வவுனியா பல்கலைகழகத்தின் வியாபார கற்கைகள் பீடத்தால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா பல்கலைக்கழக வியாபாரக் கற்கைகள் பீடமானது 4ஆவது வியாபார கற்கைகள் ஆய்வு மாநாட்டை நடத்துவுள்ளது. குறித்த மாநாடு இம்முறை “பெரும்பரவல் தொற்று நோய்க்கான வியாபாரத் தயார் நிலை முன்னுதாரண மாற்றத்திற்கான நேரம்“ என்ற ஆய்வுக் கருப் பொருளில் 2022ஆம் ஆண்டு ஆடி மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் நடத்த தீர்மானித்திருக்கின்றது.

இந்த ஆய்வு மாநாடானது வியாபாரக் கற்கைகள் பீடத்தின் வெள்ளி விழாவையொட்டி நடத்தப்பட இருக்கின்றது. நாம் எல்லோரும் பல்வேறுபட்ட எதிர்பாராத சவால்கள் மற்றும் இடர்கள் நிறைந்த சகாப்தத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். குறிப்பாக கோவிட் - 19 பேரிடர் மக்களின் அன்றாட வாழ்வாதாரத்திலும் வியாபார செயல்பாடுகளிலும் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இது தொடர்பில் வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளுக்கிடையில் வேறுபாடுகள் அரிதாகவுள்ளது. இந்த இடரானது பல மில்லியன் வேலைவாய்ப்புக்களை ஆபத்து நிறைந்ததாக மாற்றியுள்ளது.

அத்துடன், நாடுகளின் பொருளாதார மந்தம், வறுமை மற்றும் நிறுவன அமைப்புக்களின் முடக்க நிலை போன்றவற்றினைத் தோற்றுவித்துள்ளது. இவை நிச்சயமற்ற எதிர்காலத்திற்கு வித்திட்டு வருகின்றது. இந்த வகையில் எதிர்கால சந்ததியினருக்கான வளமான எதிர்காலத்தை உருவாக்குவதுடன் நெருக்கடியை தவிர்த்து வாய்ப்புக்களையும் அவர்களின் எதிர்பார்ப்புக்களையும் நிவர்த்தி செய்யக் கூடிய வகையில் புதிய வியாபார எண்ணங்களைத் தூண்டி அவர்களை வியாபாரச் சூழலில் காலத்திற்கேற்ப மாற்றங்களினைச் செய்வதற்கு, முனைவிப்பது தற்காலத்தில் மிகமுக்கியமான அம்சமாக உள்ளது.

தற்கால கோவிட்-19 பெருந்தொற்று பரவும் காலத்தில் குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகள் பொருளாதார நலன் சார்ந்து இயங்கிவரும் வியாபார தொழில் துறைகளைக் காலத்தின் தேவைக்கேற்ப கட்டியெழுப்பும் வழிவகைகளைச் செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் தற்கால நெருக்கடியான சூழலில் வியாபாரங்களைக் கட்டியெழுப்புவதனூடாக வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்,வறுமை ஒழிப்புத் திட்டங்களை வலுப்படுத்தல், ஆரோக்கியமான மனித வளத்தை உருவாக்குதல், மகிழ்ச்சியான நல்வாழ்வுச் சூழலை உருவாக்குதல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் எமது நாடு உள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் வினைத்திறனான, ஆக்கபூர்வமான மற்றும் காலத்திற்கேற்ற வியாபார சூழலைக் கட்டியெழுப்பக் கூடிய நடைமுறைக்கு சாத்தியமான விடயப் பரப்புக்களை உள்ளடக்கி வியாபாரத் துறையில் நடத்தப்படுகின்ற ஆய்வுகளானவை மிகவும் பயனுறுதி வாய்ந்ததாகக் காணப்படுகின்றன. குறிப்பாக, நிதியியல் மற்றும் கணக்கீடு, நெருக்கடி முகாமைத்துவம், விவசாய வணிகம், வியாபார பொருளியல், முயற்சியாண்மை, மனிதவள முகாமைத்துவம், அறிவு முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், செயற்றிட்ட முகாமைத்துவம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம், சர்வதேச வியாபாரம், தகவல் முறைமை கலாசாரங்களுக்கு இடையேயான தொடர்பாடல் மற்றும் வியாபார தொடர்பாடல் போன்ற தலைப்புக்கள்சார் சவால்களைத் தீர்க்கக்கூடிய பொறிமுறைகளைத் தற்காலத்தின் தேவைக்கேற்ப நிறுவுவதுடன் வியாபாரங்களைத் தற்கால வியாபாரச் சூழல் சவால்களை எதிர்கொள்ள தயார்ப்படுத்துவதுடன் இந்த ஆய்வு மாநாடு முனைப்பாக நடத்தப்படவுள்ளது.

மேலும், தெரிவு செய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வவுனியா பல்கலைக்கழக வியாபார முகாமைத்துவ இதழில் பிரசுரிக்கக்கூடிய சந்தர்ப்பமானது பிரத்தியேகமாக வழங்கப்படுகின்றது. ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரையை மார்ச் மாதம் 31 ஆம் திகதி 2022 ஆம் ஆண்டு வரை சமர்ப்பிக்க முடியும்.

ஆய்வு மாநாட்டில் முதல் முறையாக உலகப் புகழ் வாய்ந்த பேராசிரியர் மல்கொம் கூப்பர், கலாநிதி நைகெல் வில்லியம்ஸ் மற்றும் பேராசிரியர் ரவிசங்கர் ஆகியோர் முதன்மைப் பேருரைகளை வழங்கவிருக்கின்றனர். மேலும் இந்த ஆய்வு மாநாட்டிற்கு பணியாளர் மேலாண்மை பட்டயநிறுவனம், சான்றளிக்கப்பட்ட மேலாண்மைக் கணக்காளர்கள், இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம், இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் மற்றும் திட்ட மேலாண்மை நிறுவனம் ஆகியோர் பங்காளர்களாக விளங்குகின்றனர்.

இந்த மாநாடு தொடர்பான மேலதிக தகவல்களினை https://fbs.vau.ac.lk/rcbs2022/ என்ற இணை யத்தளத்தில் அல்லது இந்த ஆய்வு மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர். யூட் லியோனிடம் (0773400855)பெற்றுக்கொள்ள முடியும்.

குறித்த மாநாடு தொடர்பாக வவுனியா பல்கலைகழக வளாகத்தில் நேற்று காலை ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது. பல்கலைகழகத்தின் துணைவேந்தர் ரி. மங்களேஸ்வரன் மற்றும் வியாபாரக்கற்கைகள் பீடத்தின் தலைவர் வை. நந்தகோபன் ஆகியோர் இது தொடர்பான தெளிவூட்டல்களை வழங்கியிருந்தனர். (ஐ)

# அணு ஆயுத தடை ஒப்பந்தம்! இலங்கையும் இணைகின்றது!!

கொழும்பு, டிசெ. 22

**அணு ஆயுதங்களைப் பரந்தளவில் தடை செய்வதற்காக உலகளாவிய ரீதியில் முதலாவது பல தரப்பு தொடர்பான ஒப்பந்தம் 122 நாடுகளின் ஒத்துழைப்புடன் 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் சபையில் நிறை வேற்றப்பட்டது.**

குறித்த ஒப்பந்தம் 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப் படுத்தப்படுவதுடன், இதுவரை அதற்காக கையொப்பமிட்ட 86 நாடுகளில் 57 நாடுகள் ஏற்று அங்கீகரித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரில் இந்த ஒப் பந்தத்தை நிறைவேற்றுவதற் காக இலங்கையும் அதற்கு சார் பாக வாக்களித்து ஒத்துழைப்பு வழங்கியதுடன், அதற்கான உலகளாவிய தொடர் நடவடிக் கைகளை தொடர்ச்சி யாக ஊக்குவித்தும் வருகின்றது.

குறித்த ஒப்பந்தத்தில் பங் கெடுக்கும் நாடுகள் அணு ஆயுதமோ அல்லது வேறு அணுவாலான வெடிபொருட் களை தயாரித்தல், பரிசோதித்தல், நிர்மாணித்தல், உற்பத்தி செய்தல், பரிமாற்று தல், தன்னகத்தே வைத்திருத் தல், களஞ்சியப்படுத்தல் மற் றும் அவற்றைப் பயன்படுத்துவ தாக அச்சுறுத்தல் அல்லது தமது நிலப்பரப்பில் அவ்வா றான ஆயுதங்களை நிலைப் படுத்துவதற்கு இடமளித்தல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு எவருக்கேனும் ஒத்துழைத்தல், ஊக்குவித்தல் அல்லது தூண்டுதல் போன்ற செயல்பாடுகள் குறித்த ஒப் பந்தத்தின் மூலம் தடைசெய் யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுதல் பேரழிவு ஆயுதங்களுக்கு எதிரான மற்றும் அணு நிராயுதத் தன் மைக்கு சார்பாகவுள்ள இலங் கையின் கொள்கை ரீதியான நிலைப்பாட்டுடன் பொருத்தப் பாடானதாகும்.

அதற்கமைய, இலங்கை குறித்த ஒப்பந்தத்தில் கையொப் பமிடுவதற்காகவும், அதனை ஏற்று அங்கீகரிக்கும் செயன் முறையை ஆரம்பிப்பதற்காக வும் வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கி யுள்ளது. (கே)

# ஓட்டோ கட்டணமும் நேற்றுடன் உயர்ந்தது

கொழும்பு, டிசெ. 22

முச்சக்கர வண்டியின் முதல் கிலோ மீற்றருக்கான ஆரம்ப கட்ட ணத்தை 30 ரூபாயால் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள் ளதாக இலங்கை முச்சக்கர வண்டிகள் சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த அதிகரிப்பின் மூலம் இதுவரை இருந்த வந்த 50 ரூபாய் ஆரம்ப கட்டணம் 80 ரூபாயாக உயர்த்தப்படும்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஐ.ஓ.சி. ஆகியவை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் எரிபொருளின் விலையை உயர்த்தியநிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. (ஐ)

# கொள்கலன் வாகன கட்டணம் 20 சதவீதத்தால் உயர்கின்றது!

கொழும்பு, டிசெ. 22

நாட்டில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கலன்களை கொண்டு செல்லும் வாகனங்க ளுக்கான கட்டணத்தை அதி கரிக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று நள்ளரவு முதல் 20 சதவீதத்தால் கட்டணத்தை அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை அதி கரிப்பு காரணமாக இந்த தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# இந்திய மீனவர்கள் 12 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது!

## *14 வயது சிறுவனை விடுவிக்க நடவடிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ. 22

ஊர்காவற்றுறை கடற்பரப் பில் அத்துமீறி மீன்பிடித்த போது கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 13 பேரில் 12 பேரை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதி வான் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

இதேவேளை கைதுசெய்யப் பட்ட 13ஆவது நபர் 14 வயது சிறுவன் என்பதால் உடனடி யாக விடுதலை செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் தனியே செல்ல சிறுவன் அச்சம் வெளி யிட்டுள்ளதால் அவரை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் வரை குறித்த சிறுவனை சிறைச்சாலையில் பராமரிக்க ஏற்பாடு செய்யு மாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஞாயிற்றுக் கிழமை 43 பேர் நெடுந்தீவுக் கடற்பரப்பிலும் திங்கட்கிழமை 12 பேர் மன்னார் தெற்கு கடற் பரப்பிலும் கைதாகியிருந்தனர். இந்த நிலையில் நேற்று கைதான 14 பேருடன் கடந்த 3 நாட்களில் கைது செய்யப் பட்ட இந்திய மீனவர்களின் மொத்த எண்ணிக்கை 69 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ-2-3)

# இரு விபத்துக்களில் இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 22

இரத்தினபுரி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் நேற்று இடம்பெற்ற இரு வேறு விபத் துக்களில் இருவர் மரணமடைந் தனர் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இதற்கமைவாக, எஹலிய கொடை பொலிஸ் பிரிவு, கொழும்பு இரத்தினபுரி வீதி, எஹலியகொட நகருக்கு அரு கில் மோட்டார் சைக்கிளொன்று லொறி ஒன்றுடன் மோதி விபத் துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் செலுத்துநர் மரண மடைந்தார்.

எஹலியகொடை, மஹர வத்த பிரதேசத்தை சேர்ந்த 52 வயது நபரே இவ்வாறு மரண மடைந்தார். பிரேத பரிசோத னைக்காக எஹலியகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப் பட்டுள்ளது.

லொறி சாரதியின் கவன வீனமே இந்த விபத்துக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணை களில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மாத்தளை நாவுல பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட எலஹெர வீதி, அமண சந்திக்கு அருகில், மோட்டார் சைக்கிளொன்று பாதசாரி ஒருவர் மீது மோதியதில் பாத சாரி மரணமடைந்தார்.

கோன்கஹவெல பிர தேசத்தை சேர்ந்த 74 வயது நபரே இவ்வாறு மரணமடைந் தார். பிரேதப் பரிசோதனைக் காக அம்பன வைத்தியசாலை யின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. (கே)

# காணாமல்போன மாணவி சடலமாக மீட்பு

கொழும்பு, டிசெ. 22

பதுளை கோபோ பெருந் தோட்ட பகுதியில் மாணவி ஒருவர் காணாமல்போன நிலை யில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த மாணவி, பதுளை நகரில் உள்ள பிரத்தியேக வகுப் புக்கு சென்று வீடு திரும்பாத நிலையில், பொலிஸார் மற்றும் பொது மக்களால் தேடப்பட்டு வந்தார்.

இதேவேளை, குறித்த யுவதி யின் பாதணிகள் அடையாள அட்டை, அலைபேசி, புத் தகப்பை என்பன கோபோ தோட்டத்திலுள்ள குளத்துக்கு அருகிலிருந்து கண்டுபிடிக் கப்பட்ட நிலையில், நேற்றுக் காலை அதே குளத்திலிருந்து மாணவியின் சடலம் மீட்கப் பட்டுள்ளது.

மாணவியின் சடலம் அவ ரது தாயாரால் அடையாளம் காணப் பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனைகளுக்காக பதுளை போதனா வைத்திய சாலைக்கு சடலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான காற்ரூப் பொலிஸார்விசாரணைகளை முன் னெடுத்து செல்கின்றனர். (கே)

# ஹெரோயினுடன் நால்வர் கைதாகினர்!

கொழும்பு, டிசெ. 22

களுத்துறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் மேற் கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்புகளின் போது 50 கிராம் ஹெரோயினுடன் நால் வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை மோரக ஹஹேன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சோமாளியாபுர பிரதேசத்தில், பாணந்துறை குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 20 கிராம் 180 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோபல பிரதேசத்தை சேர்ந்த 35 வயது நபரே இவ் வாறு கைதுசெய்யப்பட்டுள் ளார்.

இதேவேளை, கொழும்பு கல்கிசை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அத்திடிய பிர தேசத்தில் கல்கிசை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது 10 கிராம் ஹெரோ யினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை பிரதேசத்தை சேர்ந்த 42 வயது நபரே இவ் வாறு கைதுசெய்யப்பட்டுள் ளார். கொழும்பு தலங்கமை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தலவத்துகொட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இரு சுற்றிவளைப்புகளில் 11 கிராம் ஹெரோயினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பத்தரமுல்லை தலவத்து கொடை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 43, 42 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (கே)

# சுகாதார சோதனை நடவடிக்கை 1,841 பேர் எச்சரித்து விடுவிப்பு!

கொழும்பு, டிசெ. 22

மேல் மாகாணத்தில் தனி மைப்படுத்தல் சட்டவிதிமுறை கள் மீறப்படுவது தொடர்பில் நடத்தப்பட்ட சோதனை நட வடிக்கையில் 1841 பேர் எச்சரிக் கையின் பின்னர் விடுவிக்கப் பட்டனர்.

நேற்று முன்தினம் நடத்தப் பட்ட இந்த சோதனை நட வடிக்கையில், 796 பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக் கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது 3,073 மோட் டார் சைக்கிள்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் 2,655 முச்சக்கர வண்டிகள் சோத னைக்கு உட்படுத்தப்பட்டன.

அத்துடன் 8,283 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட் டுள்ளனர். இவர்களில் தனி மைப்படுத்தல் சட்டவிதிமுறை களை மீறிய 1,841 பேர் எச்சரிக் கப்பட்டுள்ளனர். (கே)



கொடிகாமம் - கச்சாய் வீதியிலுள்ள "கிட்ஸ் சொய்ஸ் லேர்ணிங் பார்க்" சிறுவர் பாடசாலையின் ஒளி விழா கடந்த 18ஆம் திகதி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மிருசுவில் பங்குத்தந்தை வண. பயஸ் இருதய தாஸ், சிவசிறீ மணிகண்டன் குருக்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

# எரிபொருள் விலை உயர்வு தற்காலிகமானது மட்டுமே!

## அமைச்சர் ஜோன்ஸ்டன் சொல்கிறார்

கொழும்பு, டிசெ. 22

**எரிபொருள் விலை உயர்வு தற்காலிகமானது எனத் தெரிவித்த நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எதிர்காலத்தில், நமது பொருளாதாரம் வலுவாக இருக்கும்போது, மீண்டும் எரிபொருள் விலையை குறைப்போம் என்றும் கூறினார்.**

அதிவேக நெடுஞ்சாலை வெளியேறும் வாயிலில் லங்கா கியூ. ஆர். நடமாடும் செலுத்தல் செயலியை பயன்படுத்தி பணப் பரிமாற்றம் செய்யும் நிகழ்வு நேற்று கொட்டாவை இடை பரிமாற்ற மத்திய நிலையத்தில் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

நேற்று முன்தினம் இரவு முதல் எரிபொருள் விலை உயர்ந்துள்ளது. அரசாங்கம் என்ற வகையில் பெரும் நஷ்டத்தைச் சந்தித்த நிலையிலும் கடந்த காலமாக எரிபொருளின் விலை உயர்த்தப்படவில்லை. இந்த விலை உயர்வு தற்காலிகமானது. எதிர்காலத்தில், நமது பொருளாதாரம் வலுவாக இருக்கும் போது, மீண்டும் எரிபொருள் விலையை குறைப்போம். உலகளாவிய தொற்றுநோயுடன் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியால் நாம் வெவ்வேறு முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது.

உலகளாவிய பொருளாதார நெருக்கடி மீண்டும் வரும்போது, நாடும் அதன் மக்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அதனால் தான் முதலில் மக்களின் உயிரைக் காத்தோம். எரிபொருளால் ஏற்படும் நஷ்டத்தை மக்களுக்கு வழங்காவிட்டால், அந்த இழப்பை அரசே ஏற்க வேண்டும். அந்த இழப்பை ஈடுகட்ட மக்கள்மீது அரசு வரி விதிக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால் வரிச் சுமையை மக்கள்தான் சுமக்க வேண்டும். கட்டி அடித்தாலும் அடித்துக்கட்டினாலும் இரண்டும் ஒன்றுதான். எனவே, இதை நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

அனுரகுமார திஸநாயக்க தான் கடந்த காலத்தில் பிசாசுகளை உருவாக்கி மீண்டும் இந்த நாட்டை பின்னோக்கி தள்ளினார். பிரபாகரன் வடக்கில் பயங்கரவாதத்தை செயல்படுத்தி இந்த நாட்டை பின்தள்ள வைத்தார். தெற்கில் இருந்த பயங்கரவாதிகள் இணைந்தும் அதனைத் தான் செய்தார்கள். தமது கடந்த காலத்தை மறந்து தற்போது இந்த நாட்டில் நெருக்கடிகளை உருவாக்கி வருகின்றனர் - என்றார். (ஐ)



# டிஜிற்றலில் பணம் செலுத்தும்முறை அதிவேக நெடுஞ்சாலையில் அறிமுகம்

கொழும்பு, டிசெ. 22

அதிவேக நெடுஞ்சாலை வெளியேறும் வாயிலில் லங்கா கியூ. ஆர். நடமாடும் செலுத்தல் செயலியை பயன்படுத்தி பணப்பரிமாற்றம் செய்யும் நிகழ்வு நேற்று கொட்டாவை இடைபரிமாற்ற மத்திய நிலையத்தில் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் இந்த விழா நிகழ்வில் கலந்து கொண்டனர். நேஷன் ட்ரஸ்ட் வங்கிக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட இணைப்பின் அடிப்படையில் அதிவேக நெடுஞ்சாலையிலிருந்து வெளியேறும்போது பணத்தாள்களை செலுத்துவதற்கு பதிலாக லங்கா கியூ. ஆர். நடமாடும் கட்டண செயலியை பயன்படுத்தப்படலாம்.

இலங்கை மத்திய வங்கி, லங்கா கியூ. ஆர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றை நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, ப்ரிமி (Frimi) மூலம் இணைக்கிறது. இந்த லங்கா கியூ. ஆர். நடமாடும் கொடுப்பனவு செயலியானது தற்போது தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

இந்த செயலியைப் பயன்படுத்துவது பணப் பயன்பாட்டைக் குறைக்கும், பணப்பயன்பாடு மூலம் கோவிட் தொற்று நோய் பரவுவதைத் தடுக்கும், சமூகத்தை டிஜிட்டல் மயமாக்கலை நோக்கி நகர்த்தும், மேலும் நெடுஞ்சாலைகளின் வெளியேறும் வாயில்களுக்கு அருகில் அலுவலக நேரங்களில் அதிக போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஒரு லீற்றர் பெற்றோலில் அரசுக்கு ரூ. 69 இலாபம்!

## சம்பிக்க எம். பி. சொல்கிறார்

கொழும்பு, டிசெ. 22

92 வகை பெற்றோல் ஒரு லீற்றர் மூலம் அரசாங்கத்துக்கு 69 ரூபாய் இலாபம் கிடைப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பொரலஸ்கமுவையில் நேற்று அவர் நடத்திய சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை குறைந்துசெல்லும் நிலையில் அரசாங்கம் எரிபொருட்களின் விலையை அதிகரித்திருக்கின்றது.

மேற்குலகில் பரவிவரும் கோவிட் தொற்று மற்றும் ஐக்கிய நாடுகள், சீனா மற்றும் இந்தியா தங்களது எண்ணெய் தொகையில் இருந்து ஒரு பகுதியை வர்த்தக சந்தைக்கு விட்டிருப்பதே இதற்கு காரணமாகும்.

2021 டிசம்பர் மாதம் 92 வகை பெற்றோல் பரல் ஒன்று 85 டொலருக்கே கொண்டுவரப்பட்டது. அவ்வாறாயின் ஒரு டொலரின் உத்தியோகபூர்வ பெறுமதியான 203 என்ற அடிப்படையில் ஒரு பரல் சுமார் 17 ஆயிரத்து 255 ரூபாயாகும். இதன் பிரகாரம் சாதாரணமாக பெற்றோல் ஒரு லீற்றர் 108 ரூபாயாகும். இதன் பிரகாரம் 92 வகை பெற்றோல் ஒரு லீற்றர் மூலம் 69 ரூபாய் இலாபம் பெறப்படுகின்றது. இதேபோன்று 95 வகை பெற்றோல் லீட்டர் ஒன்றின் மூலம் 99 ரூபாய் இலாபம் கிடைக்கின்றது.

மேலும், போக்குவரத்து செலவு, கூட்டுத்தாபனத்தின் செலவு விற்பனையாளர்களின் செலவுகள் அனைத்தையும் லீற்றருக்கு 10 ரூபாய் என எடுத்துக் கொண்டால் 92 வகை பெற்



றோல் ஒரு லீற்றர் மூலம் 59 ரூபாய் இலாபம் பெறப்படுகின்றது. இதேபோன்று 95 வகை பெற்றோல் லீற்றர் ஒன்றின் மூலம் 89 ரூபாய் இலாபம் கிடைக்கின்றது.

இதேபோன்று இரண்டு வகை டீசல் எண்ணெய்களையும் 85 டொலர்களுக்கே டிசம்பர் மாதம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அப்படியாயின் இரண்டுவகை டீசல்கள் மூலம் முறையே 26 ரூபாய் மற்றும் 41 ரூபாய் என்ற அடிப்படையில் இலாபம் இருக்கின்றது. அத்துடன், எரிபொருட்களின் விலை அதிகரிக்க முடியுமாக இருப்பது நிதி அமைச்சரின் அனுமதியுடன் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்காகும். ஆனால், எரிபொருட்களின் தேவையை குறைத்துக்கொள்வதற்காக எரிபொருட்களின் விலை அதிகரிக்கவேண்டும் என்ற கோரிக்கையை மத்திய வங்கியின் ஆளுநரே முன்வைத்தார்.

இதன் பிரகாரம் விலை அதிகரிப்பை கூட்டுத்தாபனம் மேற்கொண்டது. அதனால் வலு சக்தி அமைச்சினால் பொதுஜன பெரமுன, பெற்றொலிய கூட்டுத்தாபனம் உட்பட நிறுவனங்களுக்கு பெரு குற்றச்சாட்டுக்களை தெரிவித்து, விலை அதிகரிப்பை மூடிமறைக்கும் ஊடக சந்திப்பொன்று எதிர்வரும் தினங்களில் இடம்பெறும் - என்றும் அவர் சொன்னார். (ஐ)

# ஆற்றிலிருந்து சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, டிசெ. 22

மட்டக்களப்பில் ஊறயன் வட்டை ஆற்றிலிருந்து ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் வாகனேரி குளத்துமடுவை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான முருகேசு செல்லத்துரை (வயது - 55) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை காலை மாடு மேய்ப்பதற்காக சென்றவர் பின்னர் சடலமாகவே மீட்கப்பட்டார். அவரின் கைபேசிக்கு குடும்பத்தவர்கள் அழைப்பு எடுத்தபோதும், எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் அவர் தேடப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வடமராட்சி கிழக்கு மீனவர்மீது சிவில் உடையினர் தாக்குதல்!

வடமராட்சி, டிசெ. 22

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியானில் மீன் பிடிக்க சென்று வீடு திரும்பிய மீனவர்மீது சிவில் உடையில் வந்தவர்கள் கொடூர தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலை 5 பேர் கொண்ட கும்பல் நடத்தியது என்று பாதிக்கப்பட்ட மீனவரான ராஜ்குமார் (வயது 34) தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் மீன் பிடிப்பதற்கு கடலுக்கு சென்ற நேரம் சிவில் உடையில் வந்த ஐவர் அடங்கிய கும்பல் என்னை விசாரித்தனர். இதன்போது பயந்து நடுங்கிய எனது குடும்பத்தவர்கள் எனக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து என்னை வீட்டிற்கு வருமாறு அழைத்தனர்.

தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து நானும் வீட்டிற்கு வந்தேன். அப்போது அங்கிருந்தவர்கள் எனது கை மற்றும் கால்களை கட்டி விட்டு அவர்கள் வந்த ஜீப்புக்குள் என்னை ஏற்றிவிட்டு விக்கெட் மற்றும் கொட்டனால் என்னை தாக்கினர். நான் கஞ்சா கடத்தவுமில்லை என்னிடமிருந்து கஞ்சாவை அவர்கள் மீட்கவுமில்லை என அவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-2)

# யாழ். நகரில் வீடுடைத்து திருட்டு; இரு சந்தேகநபர்கள் கைதாகினர்!

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதியில் உள்ள வீடொன்றை உடைத்து பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களை திருடிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலத்திரனியல் உபகரணங்களை விற்பனை செய்தபோது சந்தேக நபரும் அதனை விற்பனை செய்ய உதவிய தரகரும் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதியில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை வீட்டில் உள்ளவர்கள் வெளியில் சென்றிருந்த நிலையில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

வீட்டிலிருந்த 43அங்குல தொலைக்காட்சி, டி. வி. டி. பிளேயர் மற்றும் சமையல் அறை இலத்திரனியல் உபகரணங்கள் என்பன திருடப்பட்டிருந்தன. அதுதொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தடயவியல் விசாரணைகளை அடுத்து குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் டில்ருக் தலைமையிலான அணியினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.


திருடப்பட்ட இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்ட போது, அதனை விற்பனை செய்ய உதவிய தரகரும் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

ஈழநாடு

எஸ்.ராஜகுமாரன்

# தமிழ்த்தாய் வாழ்த்து: ஒரு நூற்றாண்டு வரலாறு

**தமிழ் குறித்து, தமிழ்க் கவிஞர்கள் இயற்றிய பாடல்களில், சிறந்த இரு பாடல்களாக மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய 'நீராருங் கடலுடுத்த' பாடலும், கரந்தைக் கவியரசு இயற்றிய 'வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே' என்ற பாடலும் பரிந்துரைக்கப்பட்டன**




மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய 'நீராரும் கடலுடுத்த' பாடலைத் தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவித்து அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது.

மனோன்மணீயம் பெ.சுந்தரம் கேரள மாநிலம் ஆலப்புழையில் 1855 இல் பிறந்தவர். பி.ஏ. பட்டம் பெற்றவர். சிறந்த தமிழறிஞர். அவர் இயற்றிய மனோன்மணீயம் என்னும் 4,500 வரிகள் கொண்ட கவிதை நாடக நூலில் உள்ள ஒரு பாடலே 'நீராரும் கடலுடுத்த' என்பதாகும்.

பொது நிகழ்வுகளில் தமிழ்த்தாய் வாழ்த்து, இசை வட்டுக்களைக் கொண்டு இசைப்பதைத் தவிர்த்து, பயிற்சி பெற்றவர்களால் வாய்ப்பாட்டாகப் பாடப்பட வேண்டும், பாடப்படும்போது அனைவரும் எழுந்து நிற்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் அரசாணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 1913-ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை வாசிப்பும் இந்த அரசாணையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

**கரந்தைத் தமிழ்ச் சங்கம்**

24.05.1901 அன்று பாலவனத்தம் நிலக்கிழவர் பொ.பாண்டித்துரையாரால் மதுரையில் புதிய தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டு விழா தஞ்சாவூரில் சிறப்பாக நடைபெற்றது. இதைக் கண்டு மகிழ்ந்த தஞ்சையைச் சேர்ந்த சில தமிழ்ச் சான்றோர், 'நம் நகரத்தில் இதுபோல் ஒரு தமிழ்ச் சங்கம் தொடங்கினால் நன்றாக இருக்குமே' என்று எண்ணினார்கள். அந்த நல்ல எண்ணத்தின் விளைவே தஞ்சை தமிழ்ச் சங்கம். நிலக்கிழவர் சாமிநாதனார் அந்தச் சங்கத்தின் தலைவராக இருந்தார்.

காலப்போக்கில் அந்தச் சங்கம் மறைந்தாலும், கரந்தை வட ஆற்றங் கரையில் இருந்த பஞ்சநதம் பாவா மடத்தில் தமிழ்ச் சங்கம் ஒன்று தொடங்கப்பட்டது. ரவீந்திரநாத் தாகூரின் புகழ்பெற்ற சாந்தி நிகேதன் கல்வி நிறுவனத்தின் பெயர் மீதுள்ள ஈர்ப்பின் காரணத்தால், புதிதாகத் தொடங்கப்பட்ட சங்கத்துக்கு வித்யா நிகேதனம் என்று பெயர் சூட்டப்பட்டது.

வித்தியா நிகேதனம் தஞ்சைப் பகுதியில் மிகச் சிறப்பாகத் தமிழ்ப் பணியாற்றிவந்தது. ஆனால், சங்கத் தலைவர் ராஜாளியார், செயலாளர் சாமிநாதனார் ஆகியோரின் கட்டுப்பாடுகளை விரும்பாத இளைஞர்கள் தம்முள் இணைந்து தனியாக ஒரு சங்கத்தை நிறுவ எண்ணினார்கள்.

அதன் விளைவாகத் தோன்றியதுதான் இன்றைய கரந்தைத் தமிழ்ச் சங்கம். விரோதிகிருது ஆண்டு வைகாசித் திங்கள் முதல் நாள், 14.05.1911 அன்று நாவலர் ந.மு.வேங்கடசாமி தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது. சங்கத் தலைவர் உமா மகேசுவரனார் ஒரு சிறந்த வழக்கறிஞராக இருந்ததால், தமிழ்ச் சங்கத்துக்கு முறையான பொது விதிகளை ஏற்படுத்தினார். பிற்காலத்தில் எந்த ஒரு தனிநபரும் உரிமை கொண்டாட முடியாத வகையில், 1860 இல், 21ஆவது சட்டப் பிரிவின்படி ஆனந்த சித்திரை ஆண்டு பத்தாம் நாள் 15.05.1914 சங்கம் பதிவு செய்யப்பட்டது.

**தமிழ் வாழ்த்து**

தமிழ் மொழியின் நிலைமை, தமிழரின் வாழ்வு ஆகியவற்றைச் சீர்செய்வது, சங்க உறுப்பினர்களுக்குள் நட்புரிமையையும் ஒருமைப்பாட்டையும் உண்டாக்குவது, தமிழரின் அறநிலையங்களைப் பேணிக் காப்பது, உறுப்பினர்களின் ஒழுக்க நிலை, உடல்நிலை, சமூக நிலை, கல்வி நிலை - இவை செம்மையுறுவதற்கான வசதிகளை அமைப்பது, தமிழரின் தொழிலும் பொருளாதாரமும் வளம் பெறச் செய்வது - இவைதான் சங்கத்தின் நோக்கங்களாக வரையறுக்கப்பட்டன. தொண்டு - தமிழ் - முன்னேற்றம் என்பதே கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலையாய கொள்கை என்று கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் உமா மகேசுவரன் முழங்கினார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தொடங்கப்பெற்ற இரண்டாம் ஆண்டு முதல், மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய 'நீராருங் கடலுடுத்த' என்னும் பாடல் சங்கத்தின் எல்லா நிகழ்ச்சிகளிலும் ஒலிக்கத் தொடங்கியது. முதன்முதலில் இந்தப் பாடலை மேடையில் பாடியவர் கூடலூர் வே.இராமசாமி. இந்தப் பாடல் தமிழ்நாட்டின் மேடைகளில் மட்டும் அல்லாது தரணி எங்கும் பாடிப் பரவ வேண்டும் என்பது உமா மகேசுவரனாரின் கனவு.

1913இல் தமிழ்ச் சங்கத்தின் மூன்றாம் ஆண்டு அறிக்கையில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பற்றிய குறிப்பு உள்ளது. இந்தப் பாடல் உலகெங்கும் பரவ வேண்டும் என்னும் கனவின் தொடர்ச்சியைப் போல், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆறாம் ஆண்டு அறிக்கை 'நீராரும் கடலுடுத்த' பாடலுடனேயே தொடங்குகிறது. தமிழ்ச் சங்கத்தின் அடுத்தடுத்த முன்னெடுப்புகள் அப்பாடலைத் தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் ஒலிக்கச் செய்தது!

**அண்ணாவின் தேர்வு**

அறுபதுகளின் பிற்பகுதியில் தமிழகத்தில் பெரும் அரசியல் மாற்றங்கள் அரங்கேறத் தொடங்கின. மாநில மொழிகளை நசுக்கும் விதமாக மத்திய அரசு மேற்கொண்ட இந்தித் திணிப்பு முயற்சிகள் இந்தியா எங்கும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தின. தமிழ்நாட்டு அரசியலில் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் என்னும் மாபெரும் சமூகப் புரட்சி நடந்து முடிந்திருந்த காலகட்டம் அது. அதன் விளைவாக 1967 இல் ஆட்சி மாற்றமும் ஏற்பட்டது. தமிழ் மொழியின் வளர்ச்சிப் போக்கை முன்னெடுக்கும் விதமாக, தமிழ்நாட்டில் நடைபெறும் அரசு விழாக்கள், கல்லூரி, பள்ளி விழாக்கள் அனைத்திலும் பாடக்கூடிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தமிழறிஞர்களைக் கூட்டி ஆலோசனை செய்தார் முதல்வர் அண்ணா.

தமிழ் குறித்து, தமிழ்க் கவிஞர்கள் இயற்றிய பாடல்களில், சிறந்த இரு பாடல்களாக மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய 'நீராருங் கடலுடுத்த' பாடலும், கரந்தைக் கவியரசு இயற்றிய 'வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே' என்ற பாடலும் பரிந்துரைக்கப்பட்டன. இரண்டில் ஒரு பாடலைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அண்ணாவிடம் ஒப்படைக்கப்பட்டது. 'நீராருங் கடலுடுத்த' பாடலில் வரும் 'தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்' எனும் வரிகளில் வரும் 'திராவிடம்' என்னும் சொல் அவரைக் கவர்ந்தது. அப்பாடல் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக அரசுபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான அரசாணை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை அண்ணா மேற்கொண்டார். ஆனால், அதற்குள் நோய்வாய்ப்பட்டிருந்த அண்ணா 03.02.1969 இல் மறைந்தார்.

கருணாநிதி முதல்வராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் பாட வேண்டும் என, அரசாங்கப் பொதுத் துறையின் சார்பில் 23.11.1970 அன்று அரசாணையாக வெளியிடச் செய்தார். உமா மகேசுவரனார் தோற்றுவித்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் நீண்ட நாள் பெருங்கனவு அன்று நிறைவேறியது. இன்று, அந்தப் பாடல் மாநிலப் பாடலாகவும் மாறியிருக்கிறது.



**பல்கலைக்கழகச் சூழலை ஜனநாயகமயமாக்குவதற்கு உண்மையான, அர்ப்பணிப்பான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். வகுப்பறைகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே திறந்த கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டும்.**

# இலங்கையில் உயர் கல்வியும் படிவங்களுடான தர நிர்ணயமும்

**ஹஸினி லேகம்வாசம்**

இலங்கையில் உயர் கல்வியின் மேம்பாடானது மிகவும் காலதாமதமாக்கப்பட்ட விடயம் என்பது சகலரும் அறிந்ததே. எனினும் ஆசிரியர்களின் நடவடிக்கைகளை வெறும் படிவம் நிரப்பும் கட்டமைப் புக்குள் வரையறுத்து, கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளை ஒரு கட்டுக்கோப்பிற்குட்படுத்துவதன் மூலம் கல்வியின் தரத்தை அதிகரிப்பது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பது கேள்விக்குறியா னது. இதனடிப்படையில் பட்டதாரி சுயவிவரம், பாடநெறியின் தேர்ச்சி மட்டங்கள், பாடத்திட்டத்தின் தேர்ச்சி மட்டங்கள் போன்றவற்றிற்கேற்ப ஒழுங்கு செய்யப்பட்ட நுணுக்கமான கற்பித்தல் திட்டத்தை ஒவ்வொரு வகுப்பறைப் பாடத்திற்கும் தயாரிக்குமாறு ஆசிரியர்கள் கோரப்படுகிறார்கள்.

அரச பல்கலைக்கழகங்களில் இவ்வாறான படிவங்களூடாக கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டும், பாகுபடுத்தப்பட்டும், கட்டுப்படுத்தப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வருகின்றன. இக் கட்டுரையில் இவற்றால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் மற்றும் இவை சுட்டி நிற்கும் போக்குகள் பற்றிக் கலந்துரையாடப்படுகின்றது.

**படிவங்களும் அதன் சிக்கல்களும்**

“தர உத்தரவாதத்தை” உறுதி செய்யும் பெயரில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் கற்கை நெறிகளுக்கு இலக்கங்களையும் தர வரிசைகளையும் கொடுத்து அவற்றை ஒன்றுடனொன்று ஒப்பிட எத்தனிக்கின்றன. பல்வேறு பட்ட பாட உள்ளடக்கங்கள் மற்றும் செயன்முறைகளைக் கொண்ட கற்கை நெறிகளை மேலோட்டமான பொது அளவுகோல்களைக் கொண்டு ஒப்பிடுவது உலகளாவிய ரீதியில் விமர்சிக்கப்படும் ஒரு விடயமாகும். இவ் விமர்சனத்துக்கான காரணங்களிலொன்று “தரம்” என்பது அளவீடுகள் மற்றும் தணிக்கைகளால் அளவிடப்படக்கூடியது என்ற தவறான கருத்தாகும்.

இவ்வாறு ஒவ்வொரு வகுப்பறைப் பாடத்தினையும் கூறுபடுத்துவது அப்பாடங்கள் கொண்டிருக்கக்கூடிய ஆக்கபூர்வமான தன்மையையும் ஜனநாயகத்தையும் பாதிக்கின்றது. பாடவிதானத்தின் ஒவ்வொரு தலைப்பும் நுணுக்கமாகத் திட்டமிடப்படும் போது கற்றல் பெறுபேறுகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு வரையறுக்கப்படுகின்றன. இங்கு கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளின் போது அதன் பெறுபேறுகள் ஒருங்கே இயற்கையாகப் பரிணமிப்பது முடக்கப்படுகின்றது. இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்ட கற்றல் செயற்பாடுகளால் குறிப்பாகக் கலைப் பீடங்கள் பாதிக்கப்படுகின்றன. இதன்போது உண்மையில் எம்மில் எத்தனை பேர் எமது வகுப்பறைகளில் ஜனநாயகமாக நடந்து கொள்கின்றோம் என்ற கேள்வியும் எழுகின்றது. எனினும் ஜனநாயகாமான ஒரு வகுப்பறைச் சூழலை மெய்யாக நாடும் ஒரு ஆசானை இவ்வாறான படிவங்களும் அவற்றின் வரையறைகளும் முடக்கித் திணறச் செய்கின்றன.

எம்மில் பெரும்பான்மையானோர் எமது வகுப்பறைகளில் கட்டுப்படுத்தும் வகையில் நடந்துகொள்வதை ஒப்புக் கொள்கின்றோம். இருப்பினும் இவ்வாறான படிவங்கள் மூலம் மாணவர்கள் மீதான கட்டுப்பாட்டினை நிறுவனமயமாக்கி அதனை மேலும் தீவிரமாக்குவதை அது நியாயப்படுத்தாது. பெரும்பான்மையினர் ஏற்றுக்கொள்ளும் விடயத்தையன்றி, சுதந்திரமான கருத்தியலையல்லவா நாம் பின்பற்ற முன்வர வேண்டும்? ஆசிரியர்களின் போதனைகளுக்கு அப்பால் சிந்திக்கும் மாணவர்களுக்கும், அர்த்தமுள்ள, ஆக்கபூர்வமான, ஜனநாயகமான கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளை விரும்பும் ஆசிரியர்களுக்கும் ஏற்ற ஒரு வகுப்பறைச் சூழல் வழங்கப்பட வேண்டும்.

அடக்குமுறையான சட்டதிட்டங்களுக்கு அடிபணியும் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகள் பெருநிறுவனமயம் சார்பான ஒரு போக்கைச் சுட்டி நிற்கின்றன. பொதுசன நிறுவனமொன்றைக் காலப்போக்கில் தனியார்மயமாக்கும் நோக்குடன் வியாபார நிறுவனங்களைப் போன்று மீள்கட்டமைத்தலே பெருநிறுவனமயமாக்கம் எனலாம். அரச பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் இந்த மீள்கட்டமைப்பானது “மாணவர் மையமான கற்றல்” மற்றும் “கலந்துரையடல்கள் மிக்க வகுப்பறை” போன்ற அணுகுமுறைகளின் பெயரில் முன்னெடுக்கப்படுகின்றது.

பாவ்லோ பிரையரி போன்றோரின் ஜனநாயகக் கற்றல் முறைகளிலிருந்து இவ்வணுகுமுறைகள் பெறப்பட்ட போதும் அங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் விடுதலையான அரசியல் போக்குகளோ இங்கு செயன்முறைப்படுத்தப்படாமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படினும், நுணுக்கமான படிவங்களையும் கட்டமைப்பையும் பின்பற்றும் முறையானது ஆசிரியர்களை மையமாகக் கொண்ட கல்வியை நோக்கிய திருப்பத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. கற்றலின் பெறுபேறுகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்படுவதால் அதில் மாணவர்களின் அர்த்தமுள்ள பங்களிப்புகளும் இல்லாதொழிக்கப்படுகின்றன.

இவற்றின் விளைவாக “அதிக அறிவையும் சிறிதளவு புரிந்துணர்வையும்” கொண்ட மாணவனின் உருவாக்கத்தைச் சுமார் எண்பது வருடங்களுக்கு முன்னரே கன்னங்கர அறிக்கை கணித்திருந்தது.” இவ்வாறான மாணவர்கள் புத்தகங்களை வாசிக்காது வெறும் உரைகளைக் கற்கின்றனர். அவர்களால் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஒரு முறையில் கட்டுரைகளை முன்வைக்க முடியுமேயொழிய உண்மையில் எழுத்தாக்கங்களை உருவாக்க முடிவதில்லை. அவர்களால் கேள்விகளுக்குப் பதிலழிக்க முடியுமேயொழிய பதில்களை எதிர்க்கேள்வி கேட்க முடிவதில்லை.... அவர்களின் கற்பனைகள் மங்கியுள்ளன, அவர்களின் தனித்துவமும் சிந்திக்கும் ஆற்றலும் முடக்கப்பட்டு, அவர்களது உணர்வுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.”

**மாற்று வழிகள்**

தற்சமயம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் இப் படிவம்-ரீதியான முறையாலன்றி வேறு எவ்வாறு எமது கல்வியின் தரத்தை உறுதி செய்யலாம் என்பது பலர் கேட்கும் ஒரு சரியான கேள்வியாகும். “ஜனநாயகம்” என்ற வெட்டிப் பேச்சின் கீழ் விவாதங்கள், கலந்துரையாடல்கள், ஆக்கச் சுதந்திரத்திற்கான கோரிக்கைகள் என்ற சாக்கில் பலர் தமது கடமைகளைச் செய்யத் தவறுகிறார்கள் என்பது பொதுவான ஒரு கருத்தாகும். எனினும் எனது பார்வையில் இது ஒரு நியாயமற்ற கூற்றே. கடமைகளிலிருந்து தவறுவதற்கு உள்ளக ஜனநாயகத்தைச் சுட்டும் போது இவ்வாறான செயற்பாடுகளுக்கு அதிகம் காரணமாகவிருக்கும் ஜனநாயகத்துக்கெதிரான செயற்பாடுகள் கணக்கெடுக்கப்படுவதில்லை.

இங்கு விவாதங்களுக்கோ, ஏன் கலந்துரையாடல்களுக்கும் கூட முட்டுக்கட்டையாக இருப்பது பல்கலைக்கழகங்களுள் ஊறியிருக்கும் அதிகாரப் படிநிலைகளாகும். குறிப்பாக இப் படிநிலையில் உயர் அதிகாரங்களில் இருப்போரை அவர்களது செயல்களுக்குப் பொறுப்புக் கூறுச் சொல்லும் போது ஏற்படும் எதிர்ப்புக்களை உதாரணமாக முன்வைக்கலாம். இப் படிநிலைகளின் காரணமாகவே மாணவர்களுக்கும் ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பாட உள்ளடக்கம் தொடர்பாகவோ கற்பித்தல் முறைகள் பற்றியோ எதிர்க் கேள்வி கேட்க முடியாதுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு நிலையிலும் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரப் படி நிலைகளால் மாணவர்கள் ஆசிரியர்களுக்கும், இளையவர்கள் வயது கூடியோருக்கும், பெண்கள் ஆண்களுக்கும், சிறுபான்மை பெரும்பான்மைக்கும், தனித்துவம் பாரம்பரியத்துக்கும் அடிபணிய வேண்டியுள்ளது. இது கருத்து வேறுபாடுகள், எதிர்க் கேள்விகள், மற்றும் மாற்றுச் சிந்தனைகளை முடங்கச் செய்கின்றது. ஆகவே பல்கலைக்கழகங்களில் பிரச்னையாக விருப்பது ஜனநாயகத்துக்கான பற்றாக்குறையே ஒழிய அதிகமான ஜனநாயகமல்ல.

பல்கலைக்கழகச் சூழலை ஜனநாயகமயமாக்குவதற்கு உண்மையான, அர்ப்பணிப்பான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். வகுப்பறைகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே திறந்த கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டும் இளையோருக்கும் சிரேஷ்ட நபர்களுக்குமிடையிலான அதிகார-ரீதியான உறவுமுறை மாற வேண்டும் பாரபட்சம் காட்டிப் பாகுபாடுடன் நடாத்தும் தன்மை இல்லாதொழிக்கப்பட வேண்டும் ஆடை அணியும் முறைகள் போன்ற பால் சார் கருத்துக்களும், சீண்டல்களும் எதிர்க்கப்பட வேண்டும் அதிகாரபூர்வ தொடர்பாடல்களில் பெரும்பான்மையினரின் மொழியை மட்டும் பயன்படுத்துவதை எதிர்க் கேள்வி கேட்க வேண்டும். இவையே மாற்றத்தின் ஆரம்பப் புள்ளிகளாக அமைகின்றன. இவை மூலம் சுதந்திரமான சிந்தனையையும் செயன்முறையையும் அடக்கும் இவ்வதிகாரப் படிநிலைகளை மாற்ற முடியும். பொறுப்புக் கூறும் தன்மை பற்றாக் குறையாகக் காணப்படும் எமது பல்கலைக்கழகச் சூழல்களில் பரஸ்பர பொறுப்புக் கூறல் ஊடாக கல்வியின் தரத்தை மேம்படுத்துவதே அப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கான ஒரே வழி என்பது எனது கருத்தாகும்.

**மொழிபெயர்ப்பு:**
**கோபிகா சிவகுமார்**


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தான்
நேரம் : 1 மணித்தியாலம்

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)  ..................................

(ii)  ..................................

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) is / She / reading / book / a : ..................................

(ii) small / is / That / house / a : ..................................

14. பின்வரும் இலக்கங்களுக்குரிய சிங்களச் சொல்லைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

(i) 15 : .................................. (ii) 13 : ..................................

15. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

ஒப கதவுத? : ..................................

16. தரப்பட்டுள்ள எண்ணை எழுத்தில் எழுதுக.

32015 : ..................................

17.

| | |
|---|---|
| 4 | 0 |
| 5 | 3 |

கட்டத்தினுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.

: ..................................

18. தரப்பட்டுள்ள எண்களை இறங்குவரிசையில் எழுதுக.

7401, 8400, 7275, 8280 : ..................................

19. நீர்க் குழாய்களை இடுவதற்காக வெட்ட வேண்டிய கானின் மொத்த நீளம் $16km$ $350m$ ஆகும். மழை காரணமாக வெட்டி முடித்த தூரம் $5km$ $500m$ ஆகும். மேலும் எவ்வளவு தூரம் வெட்ட வேண்டி உள்ளது?

: ..........................*km* ..........................*m*

20. பதினாறு பென்சில்களில் நான்கில் மூன்று பங்குகளில் எத்தனை பென்சில்கள் உண்டு?

: ..................................

21. பின்வரும் திண்மப் பொருள்களுக்கு உரிய விளிம்புகளின் எண்ணிக்கையை எழுதுக.

(i) நான்முகி : .................................. (ii) கனவுரு : ..................................

22. ஒரு பிள்ளை A என்னும் இடத்திலிருந்து $15m$ தெற்கே செல்கின்றது. பின்னர் அது, அவ்விடத்திலிருந்து $15m$ மேற்கே சென்று B என்னும் இடத்தில் நின்றது. A இற்கு எத்திசையில் B அமைந்துள்ளது?

: ..................................

23. ஆரம்பப்பிரிவின் விளையாட்டுப் போட்டி பி.ப. 1.15 இற்கு முடிவுற்றது. விளையாட்டுப் போட்டி 4 மணித்தியாலங்கள் நடைபெற்றது எனின், விளையாட்டுப் போட்டி ஆரம்பித்த நேரம் யாது?

: ..................................

24. மூன்று பெட்டிகளில் இருந்த ரம்புட்டான் பழங்களின் எண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| பெட்டி A - 425 | பெட்டி B - 316 | பெட்டி C - 532 |
|---|---|---|

(i) மூன்று பெட்டிகளிலும் இருந்த ரம்புட்டான் பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: ..................................

### விடைகள்

12. (i) watch / WATCH / Watch
(ii) balloon / BALLOON / Balloon

13. (i) She is reading a book
(ii) That is a small house

14. (i) பஹளொவ / பகளொவ
(ii) தஹதுன / தகதுன

15. நீங்கள் யார்?

16. முப்பத்து இரண்டாயிரத்துப் பதினைந்து

17. 3045

18. 8400, 8280, 7401, 7275

19. 10, 850

20. 12

21. (i) 6 / ஆறு
(ii) 12 / பன்னிரண்டு

22. தென்மேற்கு

23. மு.ப. 9.15

24. (i) 1273
(ii) 209

கல்வி tv CHANNEL
ஈழநாடு

# 'யானை' கோட்டையில் மலர்ந்தது 'மொட்டு'

## - எல்லயில் கவிழ்ந்தது ஆட்சி

பதுளை, டிசெ. 22

பதுளை மாவட்டத்தின் எல்ல பிரதேச சபை ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து மாற்றம் ஏற்பட்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆகிய இரு கட்சிகளின் இணைத் தலைமைகளது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு நேற்று வைபவரீதியாக நடை பெற்றது.

எல்ல பிரதேச சபையின் தவிசாளர் உதய ஜீவ பண்டாரவின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. இந்நிலையில், அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட அறிக்கை இரு முறை சமர்ப்பிக்கப்படும், அவ்வரவு - செலவுத் திட்டம் இரு முறைகளிலும் தோற்கடிக்கப் பட்டது.

இதையடுத்து, நேற்று பதுளை மாவட்ட உள்ளூராட்சி சபை ஆணையாளர் மங்கள விஜயநாயக்க தலைமையில் எல்ல பிரதேச சபை கூடி புதிய தவிசாளரைத் தெரிவு செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக எல்ல பிரதேச சபைத் தவிசாளராக இருந்த உதய ஜீவ பண்டாரவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக எம்.டி. மாலக்க பிரபாத் சிறிசேனவும் புதிய எல்ல பிரதேச சபைக்காகப் போட்டியிட்டனர்.

திறந்த வாக்கெடுப்பு நடைபெற்றதன் பின்னர் 7 : 13 என்ற ரீதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எம்.டி. மாலக்க பிரபாத் சிறிசேன வெற்றி பெற்று, எல்ல பிரதேச சபையின் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆறு மேலதிக வாக்குகளால் அவர் தெரிவானார்.

21 உறுப்பினர்களைக் கொண்ட எல்ல பிரதேச சபையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஏழு பேரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐந்து பேரும், சுயேச்சைக்குழு ஒன்றுமாக 13 பேர் எம்.டி. மாலக்க பிரபாத் சிறிசேனவுக்கு ஆதரவாக வாக்களித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஏழு பேர் மட்டும் முன்னாள் தவிசாளர் உதயஜீவ பண்டாரவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதனடிப்படையில் 13 உறுப்பினர்களது ஆதரவைப் பெற்றுள்ளதுடன் ஆறு அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் எம்.டி. மாலக்க பிரபாத் சிறிசேன வெற்றிபெற்று, மாவட்ட ஆணையாளர் முன்னிலையில், எல்ல பிரதேச சபைத் தவிசாளராகச் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டார். புதிய தவிசாளரின் ஏற்பாட்டில் 2022ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்ட அறிக்கை, விரைவில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எல்ல பிரதேச சபையின் ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவர் மட்டும் தவிசாளர் தெரிவு வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

எல்ல பிரதேச சபை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் இணைந்த வகையான இணைத் தலைமைகளின் கட்டுப்பாட்டில் இயங்குவது என்ற முடிவும் எடுக்கப்பட்டுள்ளது. (இ)

# மெனிக்கேவுக்கு காணி: அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிச. 22

"மெனிக்கே மகே ஹித்தே..." என்ற பாடல் மூலம் இலங்கைக்கு சர்வதேச மட்டத்தில் பெருமை சேர்ந்த இளம் பாடகி யோஹானி டி சில்வாவுக்கு, கொழும்பில் காணியொன்றை வழங்கும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி பத்தரமுல்லை - ரொபட் குணவர்தன மாவத்தையிலுள்ள, வீதி அபிவிருத்தி அதிகாரச் சபைக்கு உரித்தான 9.68 பச்சர்ஸ் காணி அவருக்குப் பரிசாக வழங்கப்படவுள்ளது.

இதற்கான அமைச்சரவை பத்திரத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் சமர்ப்பித்துள்ளார். (இ)

# அடுத்த அமைச்சரவைக் கூட்டத்துக்கு முக்கிய இரண்டு புள்ளிகள் அழைப்பு

கொழும்பு, டிசெ. 22

அடுத்த வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்குமாறு நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிப்புரையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கு சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டும் என அமைச்சரவையில் உள்ள ஒரு தரப்பினரும், மாற்றுத் தேர்வுகள் பற்றி பரிசீலிக்க வேண்டும் என மற்றுமொரு தரப்பினரும் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

இந்த விவகாரம் உட்பட நிதி நிலவரம் தொடர்பில் விளக்கமளிப்பதற்காகவே இவ்விருவரும் அழைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (இ)

# பஸ் கட்டணமும் அதிகரிக்கும் அறிகுறி

கொழும்பு, டிசெ. 22

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பஸ் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டியுள்ளது என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஆரம்பக்கட்டணத்தை 25 ரூபாய் ஆக்க வேண் டும் எனக் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

எனினும், பஸ் கட்டணம் அதிகரிப்பு தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. அதற்கான அனுமதியை போக்குவரத்து அமைச்சு வழங்கவில்லை. (இ)

# பொருளாதார நெருக்கடி அதியுச்சம்: சர்வகட்சி மாநாட்டுக்கு அரசு தயார்!

## அமைச்சர் பந்துல உறுதிப்படுத்தல்



**கொழும்பு, டிசெ. 22**

**நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்காகச் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இந்தத் தகவலை வர்த்தக அமைச்சர் பந்தல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

பொருளாதார நெருக்கடியைத் தேசிய பிரச்னையாகக் கருதி அனைத்து அரசியல் கட்சிகளும், அரசியல் நோக்கத்தை மறந்து இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன அழைப்பு விடுத்துள்ளார். ஜனாதிபதி தலைமையில் நடை பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் பங்கேற்பது தொடர்பில் எதிரணிகளின் நிலைப்பாடு இன்னும் வெளியிடப்படவில்லை. (இ)

# 'காஸ்' பாவனை குறித்து வீண் அச்சம் வேண்டாம்

## லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 22

"லிட்ரோ எரிவாயுக் கலவையில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. அது தொடர்பில், சர்வதேச விசேட நிபுணத்துவ நிறுவனங்களின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காஸ் பாவனையில், பொதுமக்கள் வீண் அச்சங்கொள்ளத் தேவையில்லை."

- இவ்வாறு லிட்ரோ காஸ் நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் மநேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டு, ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்கவினால் வழிநடத்தப்பட்ட ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது தொடர்ந்துரைத்த லிட்ரோ நிறுவனத்தின் தலைவர், காஸ் கசிவு மற்றும் வெடிப்புச் சம்பவங்களுக்கு, எரிவாயுக் கலவையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றமே காரணமென்று சில தரப்பினர் கருத்துக்களை முன்வைத்து வருகின்ற போதிலும், இது வரையில் பதிவாகியுள்ள எந்தவொரு சம்பவத்துக்கும், எரிவாயுக் கலவையில் ஏற்பட்ட மாற்றம்தான் காரணமென உறுதி செய்யப்படவில்லை என்றும், எரிவாயுவின் தரம் காரணமாக அவ்வாறான சம்பவமொன்று ஏற்பட்டதென உறுதி செய்யப்படுமாயின், ஒருவருக்குத் தலா ஒரு மில்லியன் ரூபாய் அடிப்படையில் காப்புறுதி வழங்க லிட்ரோ காஸ் நிறுவனம் இணங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

எரிவாயுவின் தரம் தொடர்பான எஸ்.எல்.எஸ். தரச் சான்றிதழுடன் கூடிய பரிந்துரைகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன என்றும், திரவ எரிவாயுக் கலவையானது, பியூட்டேன் 70 சதவீதம் மற்றும் ப்ரோப்பேன் 30 சதவீதத்தைக் கொண்டுள்ளது என்றும், இன்று முதல் Propane Max 30% Vol என்று காஸ் சிலிண்டரில் அச்சிட்டு வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் அறிவித்தார்.

எரிவாயு அடுப்புகளுக்காகப் பயன்படுத்தப்படும் ரெகியூலேட்டர் உள்ளிட்ட உபகரணங்கள், தரமற்ற வகையில் நாட்டின் பல பிரதேசங்களிலும் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்பது, இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது என்றும், எதிர்வரும் மூன்று மாதக் காலப்பகுதிக்குள், தரமான உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதோடு, அதன்மூலம் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு முழுமையானளவில் தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்த டீ சில்வா தெரிவித்தார்.

எதிர்காலத்தில், அந்த உபகரணங்களின் தரம் தொடர்பான பொறுப்பை, இரு எரிவாயு நிறுவனங்களிடமும் ஒப்படைக்க எதிர்பார்ப்பதாகவும், தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னையை உடன் வழமை நிலைமைக்குக் கொண்டுவருவதற்கான ஆலோசனைகளை ஜனாதிபதி அவர்கள் வழங்கியுள்ளார் என்றும், அதற்கேற்ற வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்றும் செயலாளர் குறிப்பிட்டார். காஸ் சிலிண்டர்கள் தொடர்பான தீப்பரவல்கள் மற்றும் வெடிப்புக்குள்ளாகும் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காகவும், அதற்கான தீர்வுகளைக் கண்டறிவதற்காகவும் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதிக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (இ)

# ஒமைக்ரோன் தீவிரமாக பரவும் நிலைமை; கொண்டாட்டங்களை இரத்து செய்யுங்கள்!

## உலக சுகாதார ஸ்தாபனம் கோரிக்கை

ஜெனிவா, டிசெ. 22

ஒமைக்ரோன் திரிபு வைரஸ் உலகெங்கும் மிக வேகமாகப் பரவி வரும் நிலையில் திட்டமிடப்பட்டுள்ள கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள் மற்றும் விடுமுறைக் கால சுற்றுப் பயணங்களை இரத்துச் செய்யுமாறு உலக சுகாதார அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தொற்று நோயால் வாழ்க்கையை இழப்பதைவிட கொண்டாட்டங்களைத் தியாகம் சிறந்தது என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரேயாஸ் கூறினார்.

இப்போது கொண்டாடிவிட்டு பின்னர் வருத்தப்படுவதைவிட இப்போது இரத்து செய்து பின்னர் கொண்டாடுவது நல்லது எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய ஒமைக்ரோன் திரிபு வைரஸ் டெல்டாவை விட மிக வேகமாக பரவுகிறது என்பதற்கான ஆதாரங்கள் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அமெரிக்காவில் தற்போது ஆதிக்கம் செலுத்தும் திரிபாக ஒமைக்ரோன் மாறியுள்ளது. அங்கு கடந்த வாரம் கண்டறியப்பட்ட மொத்த தொற்று நோயாளர்களில் 73 வீதமானவர்கள் ஒமைக்ரோனால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது தெரிய வந்துள்ளது. அத்துடன், அமெரிக்காவில் முதல் ஒமைக்ரோன் வைரஸுடன் தொடர்புடைய மரணம் நேற்று பதிவானது.

பிரிட்டனிலும் தினசரி 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஒமைக்



ரோன் தொற்று நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டு வருகின்றனர். மேலும், பிரிட்டனில் இதுவரை ஒமைக்ரோனுடன் தொடர்புடைய 12 மரணங்கள் பதிவாகியுள்ளன.

ஒமைக்ரோன் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக கிறிஸ்துமஸ் காலத்தில் நெதர்லாந்து கடுமையான சமூக முடக்க நிலையை அறிவித்துள்ளது. பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி உட்பட பல நாடுகள் - கோவிட் கட்டுப்பாடுகளை கடுமையாக்கியுள்ளதுடன், பயணக் கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளன.

அமெரிக்காவில் ஒமைக்ரோன் ஆதிக்கம் செலுத்தி வருகின்றபோதும் நாட்டை முடக்க ஜனாதிபதி ஜோ பைடன் திட்டமிடவில்லை என வெள்ளை மாளிகை திங்கட்கிழமை அறிவித்தது. எனினும், விடுமுறை கொண்டாட்டங்கள் மற்றும் சுற்றுப் பயணங்கள் தொற்றுப் பரவலை தீவிரமாக்கும் என அமெரிக்க தலைமை தொற்று நோய் நிபுணரான மருத்துவர் அந்தோனி ஃபாசி எச்சரித்துள்ளார்.

இதேவேளை, நேற்று செய்தியாளர்களிடம் பேசிய இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன், நாடெங்கும் கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. இருப்பினும் கிறிஸ்துமஸ் பண்டிகை வருவதால் கடுமையான பொதுமுடக்க விதிகளை அறிவிக்க அரசு அவசரம் காட்டாது - என்றார்.

எனினும், தேவைப்பட்டால் நிலைமையைக் கருத்தில்கொண்டு கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் கொரோனா சுகாதார வழிகாட்டல்களை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் எனவும் பிரதமர் போரிஸ் ஜோன்சன் கோரிக்கை விடுத்தார்.

உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், ஒமைக்ரோன் திரிபு வைரஸ் உலகெங்கும் மிக வேகமாகப் பரவி வரும் நிலையில் திட்டமிடப்பட்டுள்ள கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள் மற்றும் விடுமுறைக்கால சுற்றுப்பயணங்களை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுத்தார்.

தொற்று நோயால் வாழ்க்கையை இழப்பதை விட கொண்டாட்டங்களைத் தியாகம் சிறந்தது என அவர் கூறினார். நாம் அனைவரும் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட விரும்புகிறோம். நாம் அனைவரும் இயல்பு நிலைக்கு திரும்ப விரும்புகிறோம். இதைச் செய்வதற்கான விரைவான வழி, தலைவர்கள் மற்றும் தனிநபர்கள், தம்மையும் மற்றவர்களையும் பாதுகாக்கும் வகையிலான முடிவுகளை இப்போது எடுப்பதே எனவும் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்தார். (ஐ)

# ருவிட்டரில் நாத்திக பதிவு சவூதியில் 15 ஆண்டு சிறை!

ரியாத், டிசெ. 22

ருவிட்டர் பதிவுகளில் நாத்திகத்தை ஊக்குவித்த யேமன் நாட்டவருக்கு சவூதி அரேபிய நீதிமன்றம் 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளதாக மனித உரிமைகள் அமைப்பு ஒன்று கூறியுள்ளது.

இது தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்ட அறிக்கையில்,

சவூதியில் யேமன் நாட்டை சேர்ந்த சேர்ந்த அலி அபு லுகும் (38) என்பவர் 2 ருவிட்டர் கணக்குகள் மூலம் மத நம்பிக்கையை விமர்சித்தாரென அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. சமூகஊடகங்களில் கடவுள் மறுப்பு கருத்துகளையும் பொது நெறிகள், மத விழுமியங்களுக்கு எதிரான பதிவுகளையும் வெளியிட்டார் என்பதும் அவர்மீதான குற்றச்சாட்டு ஆகும்.

இதில் அவரின் பதிவுகள், சமய எதிர்ப்பு, சமய நம்பிக்கையின்மை மற்றும் நாத்திகத்தை ஊக்குவித்ததாக நீதிமன்றம் கருதியது. இதில் நாத்திகத்தை ஊக்குவித்தல் மற்றும் சமய எதிர்ப்புக்காக அலி அபு லுகும் குற்றவாளி என அறிவிக்கப்பட்டு, அவருக்கு 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குகுமீதான விசாரணை கடந்த ஒக்ரோபரில் நடைபெற்றது. இதில் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டு, தற்போது உச்ச நீதிமன்றத்தின் முடிவுக்காக அலி அபு காத்திருக்கிறார். அவர் தற்போது யேமன் எல்லைக்கு அருகில் நஜ்ரானில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் - என்றுள்ளது. (ஐ)



# பிலிப்பைன்ஸை தாக்கிய புயல் 375 பேர் உயிரிழப்பு 56 மாயம்!

மணிலா, டிசெ. 22

பிலிப்பைன்ஸை கடந்த வியாழக்கிழமை தாக்கிய சக்திவாய்ந்த 'ராய்' புயலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 375 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், புயலில் சிக்கிய 56 பேர் தொடர்ந்தும் காணாமல் போயுள்ள நிலையில் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

மணிக்கு 121 கி.மீ. முதல் 168 கி.மீ. வரை வீசிய சூறாவளி காற்றால் பிலிப்பைன்ஸின் மத்திய மற்றும் தென்கிழக்கு தீவு மாகாணங்களில் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. சமீபத்திய ஆண்டுகளில் பிலிப்பைன்ஸை தாக்கிய மிகவும் சக்தி வாய்ந்த புயலாக இது அமைந்திருந்தது.

2 நாட்களாக வீசிய புயல் காற்றில் சிக்கிய நூற்றுக் கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின்கம்பங்கள் சரிந்தன. வீடுகளின் மேற்கூரைகள் பறந்தன. புயல் காரணமாக கடல் கடும் கொந்தளிப்புடன் காணப்பட்டது. கரையில் நிறுத்தப்பட்டிருந்த மீன்பிடி படகுகள் பல காற்றில் அடித்துச் செல்லப்பட்டு கடலில் மூழ்கின.

புயலைத் தொடர்ந்து கடும் மழை கொட்டித் தீர்த்தது. இதனால் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் நூற்றுக்கணக்கான வீடுகள் மூழ்கின. நூற்றுக்கணக்கான கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. வாகன போக்குவரத்து முடங்கியது. புயல் காரணமாக 200இற்கும் மேற்பட்ட நகரங்களில் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது. தகவல் தொடர்பு சேவையும் முடங்கி உள்ளது.

புயல் மற்றும் வெள்ளத்தால் இலட்சக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட விவசாய பயிர்கள் நாசமாகின. இந்த புயல் காரணமாக சுமார் 8 இலட்சம் பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் சொந்த வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தற்போது முழு வீச்சில் மீட்பு பணிகள் நடந்து வருகின்றன.

# மடகஸ்கரில் கப்பல் மூழ்கியதில் 17 பேர் மரணம் 68 பேர் மாயம்!

அன்ரனேரிவோ, டிசெ. 22

மடகாஸ்கரின் வடகிழக்கு கடற்கரையில் திங்கட்கிழமை பயணிகளுடன் சரக்குக் கப்பல் ஒன்று மூழ்கியதில் 17 பேர் உயிரிழந்தனர். மேலும், கடலில் மூழ்கிய 68 பேர் காணாமல் போயுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கப்பலில் இருந்த 130 பயணிகளில் 45 பேர் மீட்கப்பட்டனர் எனவும் உள்ளூர் தன்னார்வலர்களின் உதவியுடன் மற்றவர்களைத் தேடும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் துறைமுக அதிகாரசபைத் தலைவர் ஜீன் எட்மண்ட் ராண்ட்ரியான்டெனைனா தெரிவித்தார்.

சரக்குக் கப்பல் ஒன்றில் சட்டவிரோதமாக பயணிகளை ஏற்றிச் சென்றபோதே அது மூழ்கி இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

கப்பல் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பப் பிரச்சினையால் அது கடலில் தத்தளித்தது. பின்னர் கப்பலுக்குள் தண்ணீர் புகுந்து அது மூழ்கியிருக்கலாம் என மற்றொரு துறைமுக அதிகாரசபை அதிகாரியான அட்ரியன் ஃபேப்ரைஸ் கூறினார்.





# வெள்ளத்தில் மூழ்கியது மலேசியா! பல்லாயிரம் மக்கள் இடம்பெயர்வு!!

## 14 பேர் உயிரிழப்பு

கோலாலம்பூர், டிசெ. 22

பல தசாப்தங்களில் மலேசியா கண்டிராத மிக மோசமான வெள்ளம் காரணமாக குறைந்தது 14 பேர் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

வார இறுதியில் மூன்று நாட்களாக பெய்த கடும் மழையால் எட்டு மாநிலங்களில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால் நகரங்கள் மற்றும் கிராமங்கள் நீரில் மூழ்கின. பலர் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், பலி எண்ணிக்கை கடுமையாக உயரும் என அஞ்சப்படுகிறது.

திங்கட்கிழமை நிலவரப்படி, சுமார் 51,000 பேர் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் மலேசியாவின் கிழக்குக் கடற்கரையில் உள்ள பகாங்ச் சேர்ந்தவர்கள்.

பகாங்ச் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகும். அது மாத்திரமல்லாது தலைநகர் கோலாலம்பூர் அமைந்துள்ள செழுமையும், மக்கள் தொகையும் கொண்ட சிலாங்கூர் மாநிலமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கோலாலம்பூர் நகரின் சில பகுதிகள் 1971 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ளத்திற்குப் பிறகு ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் இதுவாகும். (ஐ)



## நடாலுக்கு கொரோனா

மட்ரிட், டிசெ. 22

உலகின் முன்னணி ரென்னிஸ் வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால் கடந்த வாரம் அபுதாபியில் நடைபெற்ற கண்காட்சி போட்டித் தொடரில் பங்கேற்றார்.

இதன் முதல் ஆட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முன்னிலை வீரரான இங்கிலாந்தின் அண்டி முர்ரேவுடன் மோதிய நடால் தோல்வியை சந்தித்தார். தொடர்ந்து சனிக்கிழமை நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் கனடாவின் டெனிஸ் ஷபோவலோவிடமும் வீழ்ந்திருந்தார். இதை தொடர்ந்து நடால் தாயகம் திரும்பினார்.

இந்நிலையில் ஸ்பெயின் திரும்பிய தனக்கு நேற்று முன்தினம் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக ருவிட்டர் பக்கம் வழியே தெரிவித்துள்ளார் நடால். தற்போது வீட்டில் தனிமைப்பட்டுள்ளார் என்றும் சிறிதுசிறிதாக உடல் நலன் பெறுவேன் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# இங்கிலீஷ் பிறீமியர் லீக் மன்செஸ்டர் முதலிடம்!

லண்டன், டிசெ. 22

இங்கிலாந்தில் நடக்கும் இங்கிலீஷ் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட போட்டியில் மன்செஸ்டர் சிற்றி அணி புள்ளிப் பட்டியலில் முதலிடத்தை தொடர்ந்து தக்கவைத்துள்ளது.

தற்போதைய நிலையில் 18 போட்டிகளில் 14இல் வெற்றி பெற்று 44 புள்ளிகளுடன் முதலிடத்தில் மன்செஸ்டர் சிற்றி தனது இடத்தை தொடர்ந்து தக்கவைத்துள்ளது.



நியூகாஸில் அணியை 0 - 4 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியதன் மூலமே இந்த வெற்றியை மன்செஸ்டர் சிற்றி தொடர்ந்து தக்கவைத்துள்ளது. நியூகாஸில் அணிக்கு எதிராக மன்செஸ்டரின் ரூபன் டியாஸ் (5'), ஜாவ் கன்செலோ (27'), ரியாத் மெஹ்ரெஸ் (64'), ரஹீம் ஸ்டேர்லிங் (86') ஆகியோர் கோல்களை அடித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நடைபெற்ற இதர ஆட்டங்களில் லிவர்பூல் - டோட்டென்ஹோம் அணிகள் மோதிய ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையானது. லிவர்பூல் அணிக்காக டியோகோ ஜோடா (35'), அண்ட்ரூ ரொபேர்ட்சன் (69') ஆகியோர் கோல் அடித்தனர். டோட்டென்ஹோமுக்காக ஹேரி கேன் (13'), சன் ஹியுங் மின் (74') கோல் அடித்தனர்.

செல்சி - வோல்வ்ஸ் அணிகள் மோதிய ஆட்டம் கோலின்றி சமநிலையானது. முன்னதாக கொரோனா பாதிப்பு காரணமாக தனது அணியில் பிரதான வீரர்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் ஆட்டத்தை தள்ளி வைக்க செல்சி கோரியும், அதற்கு போட்டி நிர்வாகம் செவி சாய்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தென்னாபிரிக்க - இந்திய தொடர் ரசிகர்களுக்கு அனுமதியில்லை




ஜொகன்னர்ஸ்பேர்க், டிசெ. 22

தென்னாபிரிக்க, இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் பார்வையாளர்களுக்கு அனுமதி யில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சென்றுள்ள இந்திய அணி 3 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி வரும் 26ஆம் திகதி சென்சூரியன் நகரில் தொடங்குகிறது. இந்த டெஸ்ட் போட்டிக்காக விராட் கோலி தலைமையிலான இந்திய அணி தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் கொரோனா வைரஸின் 4ஆவது அலை பரவி வருகிறது. இந்த 4ஆவது அலையில் அதிவிரைவாகப் பரவக்கூடிய ஒமைக்ரான் வைரஸ் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்தப் பெருந்தொற்றுக்கு மத்தியில் இந்திய அணியினர் அங்கு பயணம் செய்து விளையாடவுள்ளனர். தென்னாபிரிக்கா சென்றதிலிருந்து இந்திய வீரர்கள் கடும் உயிர் குமிழி வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழலில் ரசிகர்கள் மத்தியில் இரு அணியினரும் விளையாடினால், கொரோனா தொற்றுக்கு ஆளாகக் கூடும் என்பதால், பார்வையாளர்கள் இன்றி ஒருநாள், இருபது - 20 தொடரை நடத்த தென்னா பிரிக்க கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

இந்த முடிவுக்கு இந்திய கிரிக்கெட் சபையும் சம்மதம் தெரிவித்துள்ளது. (ஐ)

# இந்தியாவுடனான டெஸ்ட் நோர்ட்ஜே விலகினார்!

ஜொகன்னர்ஸ்பேர்க், டிசெ. 22

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து பிரபல தென்னாப்பிரிக்க வேகப்பந்து வீச்சாளர் அன்ரிச் நோர்ட்ஜே விலகியுள்ளார்.



இந்திய அணி தென்னாபிரிக்காவில் 3 டெஸ்ட், 3 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடுகிறது. தெ.ஆ. அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் டிசெம்பர் 26 அன்றும் ஒருநாள் தொடர் ஜனவரி 19 அன்றும் தொடங்குகின்றன.

இந்நிலையில், காயம் காரணமாக பிரபல தென்னா பிரிக்க வேகப்பந்து வீச்சாளர் அன்ரிச் நோர்ட்ஜே இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து விலகியுள்ளார். இது தொடர்பான அறிவிப்பு நேற்று வெளியானது.

28 வயதான நோர்ட்ஜே, 12 டெஸ்ட்கள், 12 ஒருநாள், 16 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். (ஐ)

# சிறுமி பாலியல் வன்கொடுமை; யசிர் ஷாமீதும் குற்றச்சாட்டு!

இஸ்லாமாபாத், டிசெ. 22

14 வயது சிறுமியை வன்கொடுமைக்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றத்திற்காக பாகிஸ்தானின் பிரபல கிரிக்கெட் வீரர் யஷிர் ஷாமீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

35 வயது யசிர் ஷா, பாகிஸ்தானுக்காக 46 டெஸ்ட்கள், 25 ஒருநாள், 2 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

கடந்த ஒகஸ்ட் 14ஆம் திகதி யசிர் ஷாவின் நண்பர் 14 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்தார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்ய சிறுமியின் உறவினர் முயன்றபோது யசிர் ஷா அவரை மிரட்டினார் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து முதல் தகவல் அறிக்கையில் யசிர் ஷாவின் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு தொடர்பாக இதுவரை யாரும் கைதுசெய்யப்பட வில்லை.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடன் ஒப்பந் தத்தில் உள்ள வீரர்மீது புகார் கூறப்பட்டுள்ளது. இதுகுறித்த தகவல்களைச் சேகரித்து வருகிறோம். முழு விவரங்களும் கிடைத்த பிறகே எங்கள் கருத்தைத் தெரிவிப்போம் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்த விவகாரம் பற்றி கூறியுள்ளது. (ஐ)





யாழ். நல்லூர் சிவன் கோயில் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# ‘உண்மை’ நிலையை இன்று வெளிப்படுத்துவார் கப்ரால்



கொழும்பு, டிசெ. 21

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலால் நடத்தப்படும் விசேட செய்தியாளர் மாநாடு இன்று நடைபெறவுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் முற்பகல் 10 மணிக்கு குறித்த ஊடகவியலாளர் மாநாடு ஆரம்பமாகும்.

பொருளாதார நெருக்கடி, அந்நியச் செலாவணி உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பில் அவர் விளக்கமளிக்கவுள்ளதுடன், எழுப்பப்படும் கேள்விகளுக்கும் பதிலளிக்கவுள்ளார். (இ

# ஜனவரியில் அமைச்சரவை மறுசீரமைக்கப்படுமா?

## ஜனாதிபதியே தீர்மானிப்பார் என்கிறார் டலஸ்



கொழும்பு, டிசெ. 22

**“தற்போதைய அமைச்சரவை மறுசீரமைக்கப்படுமா என எம்மால் எதுவும் கூறமுடியாது. அது தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிப்பார்.”**

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது, 2022ஆம் ஆண்டு ஜனவரி ஆரம்பத்தில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றனவா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“அமைச்சரவை மாற்றம் குறித்து சமூக ஊடகங்களில் தகவல்கள் பரவி வருகின்றன.

மாற்றம் பற்றி எமக்கு உறுதியாக கூற முடியாது.

அரசமைப்பின் பிரகாரம் அதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அவர் நினைத்தால் மறுசீரமைப்பு செய்யலாம்” - என்றார். (இ)



# எல்லா வழிகளிலும் நாம் போராடுவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 22

“ரஞ்சன் ராமநாயக்க சிறையில் இருக்க வேண்டிய நபர் கிடையாது. எனவே, அவரின் விடுதலைக்காக ஜனநாயக வழியில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம்.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிறைத் தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை சந்திப்பதற்காக நேற்றுமுன்தினம் வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர், சிறைச்சாலை வளாகத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“ஊழல், மோசடிகளுக்கு எதிராகவும், நல்லாட்சிக்காகவும் குரல் கொடுத்து துணிகரமாகப் போராடியவர்தான் ரஞ்சன் ராமநாயக்க. மக்களின் உரிமைகளைக் காக்க முன்னின்று செயல்பட்டவர். அதனால்தான் மக்களின் மனங்களிலும் மனங்களிலும் குடிகொண்டுள்ளார். எனவே, அவர் சிறையில் இருக்க வேண்டிய நபர் கிடையாது. கொலை அல்லது கொள்ளையடித்துவிட்டு சிறைக்கு சென்றவரும் கிடையாது. அதனால்தான் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம்கூட ரஞ்சனின் விடுதலையை வலியுறுத்துகின்றது.

ரஞ்சன் ராமநாயக்கவுக்குப் பொதுமன்னிப்பு வழங்குமாறு நான் ஜனாதிபதியிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளேன். சாதகமான பதில் கிடைக்கும் என நம்புகின்றோம். ரஞ்சன் ராமநாயக்க முழுமையான ஜனநாயக உரிமைகளுடன் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கினறேன். அதேபோல் அவரின் விடுதலைக்காக ஜனநாயக வழியில் போராடுவோம்” - என்றார். (இ)






## கடும்...

ரெலோ கட்சியின் ஏற்பாட்டில் 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதை இந்தியா உறுதி செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துமாறு இந்தியப் பிரதமரை கோரி தமிழ் பேசும் கட்சிகள் சார்பில் கடிதம் ஒன்றை அனுப்புவதற்கான சந்திப்புக்கள் இடம்பெற்றன. இந்தக் கடிதத்துக்கான வரைவு தயாரிக்கப்பட்ட நிலையில் அதில் திருத்தங்களை ஏற்படுத்தி கையொப்பமிடுவதற்காக நேற்றைய தினம் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் கொழும்பு குளோபல் ரவர்ஸ் ஹோட்டலில் ஒன்றுகூடினர்.

காலை, மாலை என இரு அமர்வுகளாக இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், இலங்கை தமிழ் அரசுக் கட்சி நேற்று முன்தினம் செயல்குழு கூட்டத்தில் முடிவு எடுத்தவாறு தனியான வரைவு ஒன்றுடன் பங்கேற்றது. ஏற்கனவே ரெலோவும் மற்றைய கட்சிகளும் இணைந்து உருவாக்கிய வரைவு 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதையே கோரிக்கையாகக் கொண்டிருந்தது. தமிழ் அரசுக் கட்சியின் வரைவில், கூட்டு உறவு சமஷ்டி கட்டமைப்பை கோரிக்கையாகவும் உச்ச பட்ச அதிகாரப் பரவலாக்கத்தையும் கோரும் விதமான வரைவை சமர்ப்பித்தது.

இந்த விடயங்கள் தொடர்பில் தமிழ் பேசும் கட்சிகள் கூடி ஆராய்ந்தன. இதன்போது கடுமையான வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து வரைவில் தமிழ் அரசுக் கட்சியின் விடயங்களை கோரிக்கொண்டு, தற்காலிக ஏற்பாடாக 13ஆவது திருத்தத்தை அப்படியே நடைமுறைப்படுத்தக் கோருவதை அடிப்படையாகக் கொண்டு வரைவில் திருத்தம் ஏற்படுத்த உடன்பாடு எட்டப்பட்டது. மதியம் 1.30 மணியுடன் முதல் அமர்வு முடிவடைந்த நிலையில், புதிய வரைவு தயாரித்து முடிக்கப்படவில்லை.

இதைத் தொடர்ந்து பிற்பகல் 2.45 மணியளவில் இரண்டாவது அமர்வு ஆரம்பமானது. இந்த அமர்வு ஆரம்பமான பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் ஆகியோர் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துமாறும், வரைவை இறுதி செய்து அனுப்பிய பின்னர் அவற்றை படித்து திருத்தங்கள் இருந்தால் கூறுவதாகக் கூறி கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

தொடர்ந்து காரசாரமாக இடம்பெற்ற கூட்டத்தில் இறுதி வரைவில் இடம்பெற வேண்டிய விடயங்கள் குறித்து இறுதியில் சுமூகமாக முடிவு எட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து மாலை 5.45 மணியளவில் கூட்டம் நிறைவடைந்தது.

இந்த சந்திப்பில் எட்டப்பட்ட விடயங்கள் அடங்கிய இறுதி வரைவு எட்டப்பட்டதும். அந்த வரைவு அனைத்து கட்சிகளின் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டு, அவர்கள் படித்து திருத்தங்கள் ஏதும் இருந்தால் அவையும் திருத்தப்பட்டதன் பின்னர் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் அந்தக் கடிதத்தில் கையொப்பமிடுவர். எதிர்வரும் சனிக்கிழமை மாலைக்குள் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கையொப்பமிடுவது என்று முடிவு எட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து எதிர்வரும் திங்கட்கிழமை இந்திய தூதரகம் ஊடாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதத்தை அனுப்பி வைப்பது என்று முடிவு எட்டப்பட்டது.

இந்த சந்திப்பில் இரா.சம்பந்தன், ரவூப் ஹக்கீம், மாவை சேனாதிராஜா, மனோ கணேசன், அமீர் அலி, சி.வி.விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், என்.சிறீகாந்தா உட்பட்ட அரசியல் தலைவர்கள் பங்குகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பயங்கரவாத...

நேற்று தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர் கரன் அன்ரூசுடனான சந்திப்பின்போது அவர் இதனை தெரிவித்துள்ளார்

பிராந்தியத்தின் கல்விக் கேந்திர மையமாக இலங்கையை மாற்றுவதற்கு உதவுவதாக அவுஸ்திரேலிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திருமதி கெரன் அன்ட்ரூஸ் என்னிடம் தெரிவித்தார். என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் பட்டப்படிப்புகளைப் படிக்க விரும்பும் பிற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு பொருத்தமான பாடநெறிகளின் ஆரம்ப கட்டத்தை இலங்கையில் தொடர்வதற்குத் தேவையான கல்வி நிறுவனங்களை இலங்கையில் நிறுவுவதன் மூலம் இந்த வாய்ப்பு வழங்கப்படுவதாக திருமதி அன்ட்ரூஸ் சுட்டிக்காட்டினார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

11.7 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் உதவியை இலங்கையில் கொவிட் தடுப்புச் செயல்முறைக்கு அவுஸ்திரேலியா வழங்கியதை அவரிடம் நான் நினைவு கூர்ந்தேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளராக நான் இருந்தபோது, மனித கடத்தலை நிறுத்துவதற்கு அப்போதைய அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஸ்கொட் மொரிசனுடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது. அவுஸ்திரேலியாவின் தற்போதைய பிரதமராக ஸ்கொட் மொரிசன் செயற்படுவதையிட்டு எனது மகிழ்ச்சியையும் நான் தெரிவித்துக் கொண்டதுடன் போதைப்பொருள் வியாபாரம் கடற்கொள்ளையர்களின் செயற்பாடுகள் மற்றும் மனித கடத்தல் ஆகியவற்றை தடுப்பதற்கான வலுவான பொறிமுறையை இரு நாடுகளும் மேலும் எதிர்பார்த்துள்ளதனையும் தெரிவித்தேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

இந்தியப் பெருங்கடலின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கான பணிகளுக்கு தனது அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்றும் பிராந்தியத்தின் பாதுகாப்பு தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்றும் திருமதி ஆண்ட்ரூஸ் கூறினார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்தம் செய்வதற்கு புலம்பெயர் மக்களுடன் புரிந்துணர்வுடன் எமது அரசாங்கம் செயற்பட்டு வருவதனை அவரிடம் நான் தெரிவித்தேன். என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## சீனாவுடன்...

தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்திய - சீனா முரண்பாடு வருங்காலத்தில் இது எம்மை பாதிக்கும். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வல்லரசு பிரச்னைகள் - முரண்பாடுகள் - எதிர்பார்ப்புகள் சிறிய நாடான இலங்கைக்கு பெரும் பிரச்னைகளை உருவாக்கவுள்ளது. இந்த அரசாங்கம் ஒருவரை மற்றொருவருக்கு எதிராக தூண்டி விடுகிறது.

ஒரு இலட்சம் கோடி ரூபாய் பெறுமதியான உதவிகள் சீனாவிடம் இருந்து கிடைக்கிறது. இந்தியாவுடன் தமிழ் மக்களுக்கு மொழி, மத, கலாசார ரீதியான தொடர்பு உள்ளது. இந்த தொடர்புகளை பாதிக்கும் வகையில் வடக்குக்கான சீன விஜயம் அமைந்துள்ளது. இந்த வருகையை நல்ல விதத்தில் பார்க்கவில்லை.

சீனா மட்டுமல்ல யாராக இருந்தாலும் அவர்கள் தமது சொந்த நலன்களுக்கே வருவார்கள் - தருவார்கள். இதனால், சீனாவுடன் மட்டுமல்லாமல் இந்தியாவுடனும் கவனமாக நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். இல்லையேல், வருங்காலத்தில் இலங்கை பல்வேறு பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கும் - என்றார். (ஐ)

# யாழ். போதனா மருத்துவர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பு!



யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதன் காரணமாக நோயாளர்கள் சிரமத்துக்கு உள்ளாகின்ளார்கள் என போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சி. யமுனாநந்தா தெரிவித்தார்.

அரச வைத்திய சேவையில் உள்ளோர் நேற்று நாடு முழுவதும் பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்ட நிலையில் அங்கும் வேலைநிறுத்தப் போராட்டம் இடம்பெற்றது.

குறிப்பாக வெளிநோயாளர் பிரிவு இயங்கவில்லை. அத்தியாவசியமான மருத்துவ சேவைகள் மாத்திரம் இயங்கின. அத்தோடு வெளிநோயாளர் பிரிவில் நாய்க்கடிக்கு உள்ளாகியோருக்கு சிகிச்சை நடைபெற்றது. அதேபோல் கொரோனா தடுப்பு மருந்து வழங்கல் மற்றும் சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் அத்தியாவசியமான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப் படுகின்றது. இந்தசிரமங்களுக்கு மனம்வருந்துகிறோம் என தெரிவித்தார்.

உண்ணிகாய்ச்சல், டெங்கு, மலேரியா நோய் தொடர்பில் யாழ்ப்பாண மக்கள் அவதானமாக செயல்படுங்கள் எனவும் மருத்துவர் யமுனானந்தா கோரினார்.

உண்ணிகாய்ச்சல் என்பது மழைக்குப் பின்னரான காலத்தில் வயல்களில், தோட்டங்களில் வேலைசெய்யும்போது தொற்றுகின்ற நோயாகக் காணப்படுகின்றது. இதனை ஆரம்பத்திலேயே சிகிச்சை அளித்தால் பாதுகாக்கலாம். தவறும்பட்சத்தில் உயிரிழப்பு ஏற்படலாம். எனவே நாய், பூனைகளுடன் தொடர்பில் இருப்பவர்கள் கவனமாக இருத்தல் வேண்டும். காய்ச்சல் வரும்போது உரிய மருத்துவ சிகிச்சை பெறவேண்டும்.

இதேபோல டெங்குகாய்ச்சலும் இந்த மழையுடன் அதிகரித்து காணப்படுகின்றது. இதனை கட்டுப்படுத்த வேண்டும். யாழ் போதனாவைத்திய சாலையில் சுமார்10 நோயாளர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றார்கள். எனவே, பொதுமக்கள் தம்மை டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள சுற்றுச்சூழலை சுகாதாரமாக வைத்திருத்தல் மிகவும் அவசியமாகும் - என்றும் கூறினார். (ஐ-3)

## நேற்று 518 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, டிசெ. 22

நாட்டில் மேலும் 518 பேருக்கு கொவிட் தொற்று நேற்றைய தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 80 ஆயிரத்து 727 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## வெதுப்பக...

இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதன்மூலம் 450 கிராம் எடையுள்ள பாண் மற்றும் வெதுப்பக உற்பத்திகளுக்கு உற்பத்தியாளரான வெதுப்பகமே நிர்ணயிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## அத்துமீறும்...

நேற்று பார்வையிட்ட அமைச்சர், இந்திய இழுவை வலைப் படகுகளை பார்வையிட்ட பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இலங்கை கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினையும் இலங்கையின் கடல் வளத்தையும் பாதிக்கும் வகையில் எல்லை தாண்டி வந்து சட்ட விரோதத் தொழில் முறைகளில் ஈடுபடுகின்ற இந்திய கடற்றொழிலாளர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்கிய ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற கடற்படையினருக்கும் வடக்கு கடற்றொழிலாளர்கள் சார்பில் நன்றி தெரிவிப்பதாகத் தெரிவித்தார்.

மேலும், அரசுடமையாக்கப்படுகின்ற படகுகளை பிரதேச கடற்றொழில் சங்கங்களிடம் கையளித்து, ஆழ்கடல் மீன்பிடி போன்ற சட்ட ரீதியான தொழில்களில் ஈடுபடுவதற்கு பயன்படுத்தப்படும் எனவும், அவ்வாறு பயன்படுத்த முடியாத படகுகளை விற்பனை செய்து இந்தியக் கடற்றொழில் படகுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈட்டை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ)

## பஸ், ரயில்...

ஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, நேற்று தெரிவித்தார்.

15 தொடக்கம் 20 வீதம் வரையில் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென தனியார் பஸ் சங்கங்கள் தெரிவித்த போதிலும் தற்போதைக்கு பஸ் கட்டணத்தை அதிகரிக்க முடியாது என்வும் அவர் தெரிவித்தார்.

பொருட்களின் விலைகள் அதிகரித்து மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கும் இவ்வேளையில் திடீரென பஸ் கட்டண திருத்தத்தை மேற்கொள்ள முடியாது.

பஸ்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் அதற்கமைவாக எதிர்காலத்தில் விசேட நிவாரணப் பொதி அறிமுகப்படுத்தப்படும் எனவும் மேலும் தெரிவித்தார்.

## ராஜா திரையரங்க...

கொழும்பில் காலமானார். அவருக்கு வயது 91 ஆகும்.

இலங்கையின் பழம்பெரும் திரைப்பட விநியோகஸ்தரான அவர் யாழ்ப்பாணத்தில் ராஜா, திருகோணமலையில் சரஸ்வதி, மட்டக்களப்பில் சாந்தி, வவுனியாவில் வசந்தி ஆகிய திரையரங்குகளின் உரிமையாளராகவும் விளங்கினார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மூத்த உறுப்பினரான இவர், தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் காலம் முதல் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களுடன் மிக நெருக்கமான நட்பையும் கொண்டிருந்தார்.

மேலும், யாழ்ப்பாணத்தின் பல்வேறு தொழில்துறைகளில் கால்பதித்த அவர், யாழ்ப்பாணம் நகர கதிரேசன் ஆலயத்தின் பரிபாலகராகவும் விளங்கியிருந்தார்.

பிரபல நடிகரும் பின்னாளில் தமிழ் நாடு முதலமைச்சருமான எம். ஜி. ஆர். என்று அறியப்பட்ட எம். ஜி. இராமசந்திரனை இவர் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இந்த ஆண்டில் மட்டும் 847 எரிவாயு அனர்த்தம்!

கொழும்பு, டிசெ. 22

**இந்த வருடத்தில் மட்டும் நேற்று முன்தினம் வரை நாடளாவிய ரீதியில் 847 சமையல் எரிவாயு சிலிண்டர் சார்ந்த அனர்த்தங்கள் பதிவாகியுள்ளன. இந்த அனர்த்தங்களால் 7 பேர் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர் என்று தெரிய வருகின்றது.**

சமையல் எரிவாயு வெடிப்பு தொடர்பான விசாரணை மற்றும் தீர்வுகளை முன் வைப்பதற்காக ஜனாதிபதி நியமித்த சிறப்புக் குழுவின் அறிக்கை ஊடாக இது தெரியவந்துள்ளது.

இந்த 847 சம்பவங்களில், 797 சம்பவங்கள் லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் சம்பந்தப்பட்ட அனர்த்தங்கள் எனவும், 50 சம்பவங்கள் லாப் எரிவாயு சிலிண்டர் தொடர்பானவை எனவும் தெரியவந்துள்ளது. இந்த ஆண்டு ஜனவரி 1முதல் இன்று வரை 18 சொத்து சேதங்களும் பதிவாகியுள்ளன. கடந்த 2019 ஆம் ஆண்டு 18 எரிவாயு சிலிண்டர் தொடர்பிலான அனர்த்த சம்பவங்களும், 2020 ஆம் ஆண்டில் 31 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இவ்வாண்டு அச்சம்பவங்கள் 847ஆக அதிகரித்துள்ளது.

அண்மையில் பதிவான எரிவாயு சிலிண்டர் சார்ந்த அனர்த்தங்களில் 299 சம்பவங்கள், மக்கள் எரிவாயு கசிவு ஏற்படுகிறதா என சவர்க்கார நீர் உள்ளிட்டவற்றை கொண்டு சோதனை செய்ய முற்பட்டதால் ஏற்பட்டது என சமையல் எரிவாயு வெடிப்பு தொடர்பான விசாரணை மற்றும் தீர்வுகளை முன் வைப்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவின் உறுப்பினர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா திபர் தேசபந்து தென்னகோன் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சுமார் 40 இலட்சம் பேர் சமையல் எரிவாயுவை பயன்படுத்துவதாக சுட்டிக்காட்டும் அவர், வருடாந்தம் 50 ஆயிரத்துக்கும் அதிகமான எரிவாயு அடுப்புகள் உள்ளிட்டவை திருத்தப்படுகின்றன என்றும் குறிப்பிட்டார். இதன்படி 2021 ஜனவரி 1 ஆம் திகதி முதல் 2021 டிசம்பர் 19 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வாயு அடுப்புக்களின் முகப்பு கண்ணாடி வெடிப்பு மற்றும் அடுப்பு வெடிப்புச் சம்பவங்களாலேயே அதிக சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மொத்தமாக பதிவாகியுள்ள எரிவாயு சிலிண்டர் சார்ந்த சம்பவங்களில் 477 சம்பவங்கள் வாயு அடுப்புக்களின் கண்ணாடி முகப்பு வெடிப்பு மற்றும் வாயு அடுப்புக்கள் வெடித்ததால் பதிவாகியுள்ளன ஜனாதிபதியால், சமையல் எரிவாயு வெடிப்பு தொடர்பான விசாரணை மற்றும் தீர்வுகளை முன் வைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கூறுகிறது. (ஐ)

## குளிப்பதற்காக கிணற்றுக்குள் பாய்ந்த சிறுவன் சடலமாக மீட்பு!



வவுனியா, டிசெ. 22

வவுனியா கொக்குவெளி பகுதியில் கிணற்றில் நீராடச் சென்ற சிறுவன் காணாமல் போன நிலையில் நேற்றுமுன் தினம் இரவு 11.30 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டார்.

வவுனியா கொக்குவெளி பகுதியில் அமைந்துள்ள தோட்டக்கிணற்றில் நீராடுவதற்காக சிறுவன் ஒருவன் நேற்று குதித்துள்ளார். அந்த சிறுவன் அந்தப்பகுதியில் மாடுகளை மேய்த்து கொண்டிருந்ததுடன், கிணற்றில் குளிக்க செல்வதாக அருகில் இருந்த இளைஞர்களிடம் தெரிவித்துவிட்டு சென்றுள்ளார்.

இந்நிலையில் அவர் தனது ஆடைகளை கழற்றி கிணற்றின் அருகில் வைத்துவிட்டு கிணற்றுக்குள் குதித்துள்ளார். இதனை அவதானித்த அவரின் நண்பர்கள் கிணற்றுக்குள் சென்றுபார்த்தபோது, அந்த இளைஞரை காணவில்லை. இதையடுத்து ஊர்மக்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற கிராமத்தவரகள் கிணற்றினுள் இறங்கி தேடுதல் நடத்திய நிலையில் நீண்ட நேரமாகியும் குறித்த சிறுவனை மீட்க முடியவில்லை.

எனினும் கிராமமக்களின் தொடர்சியான முயற்சியால் கிணற்றுநீர் வெளியில் இறைக்கப்பட்டு இரவு 11.30 மணியளவில் குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டான்.

இந்த சம்பவத்தில் அகிலேஸ்வரன் தனுசன் என்ற 16 வயது சிறுவனே மரணமடைந்தார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாமடு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)




## பால்மா விலையிலும் மாற்றம் ஏற்படலாம்

கொழும்பு, டிசெ. 22

சந்தையில் தொடர்ந்து பால் மாவுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது எனவும், எதிர் காலத்தில் பால்மா விலையில் மீண்டும் மாற்றம் ஏற்படலாம் எனவும் பால்மா இறக்குமதியா ளர்கள் சங்கம் தெரிவித்துள் ளது.

நாட்டில் நிலவும் டொலர் பிரச்சினை, கப்பல் போக்கு வரத்தில் ஏற்பட்ட தாமதம் மற்றும் களஞ்சியசாலைகளின் கட்டண அதிகரிப்பு போன்ற காரணங்களால் பால்மா இறக்குமதியில் பிரச்னை ஏற்பட்டுள் ளது என அதன் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (இ)

# மரண அறிவித்தல்



**பிறப்பு:** **03.04.1952**

**இறப்பு:** **21.12.2021**

## ஆனந்தம் சிவகுருநாதன்
## (அருமை அண்ணா)

யாழ். மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், கைதடி நுணாவிலை வதிவிடமாகவும் கொண்ட ஆனந்தம் சிவகுருநாதன் அவர்கள் நேற்று (21.12.2021) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனந்தம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பேரம்பலம் - பவளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினம்(கிளி) அவர்களின் அன்புக் கணவரும், சிவசுதன் (புல்மோட்டை கனிப்பொருள் கூட்டுத்தாபனம்), சிவவதனி(ஆசிரியை- நாவற்குழி மகா வித்தியாலயம்), சிவதர்ஷன்(கனடா), சிவகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சண்முகநாதன், நாதன், பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற கமலாதேவி, சற்குணம், துஷாந்தினி, அருணாசலம், இராஜேஸ்வரி, இந்திராணி, பாலசிங்கம், சிங்கராசா (பிரான்ஸ்), துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,கவிதா, சிவகுமார் (பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), மதுமதி(கனடா), லோகேஸ்வரன் (கமநல சேவைகள் நிலையம், வேலணை) ஆகியோரின் அன்பு மாமனாரும், கமலேஸ்வரன், அனோஜன், சர்வின், ஜிலுசிகா, புவின்சன், சோபிதன், ரிதுசன், தருணிகா, லஸ்னிகா, பவிஷ்னிகா, அஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

தொடர்புகளுக்கு:
**தம்பா - மகன்** Mobile : +16472057194

தகவல்:
**குடும்பத்தினர்.**

ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)
பகல்
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை



1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மாஸ்,ஹீரோ
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை
நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10
திரைப்படங்களின் தரவரிசை
இரவு
7.00 மணி : பாரதீ
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்-பஞ்சநாயகி
பிரான்சிஸ்கா சின்னத்துரை-ஓய்வுநிலை
ஆசிரியர்



9.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில்
கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி
வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர்
(யாழ்ப்பாணம் திங்கள்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு